# சைவநீதி

# SAIVANEETHI

## மாத்தளை அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலய மாசி மக மகோற்சவச் சிறப்பிதழ்

பிரமாதி மாசி




ரூ.25.00


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சைவநீதி

மலர் 3 பிரமாதி மாசி சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் மாத இதழ் இதழ் 11

கௌரவ ஆசிரியர்
ஞானசிரோமணி
சைவப்புலவர்மணி, வித்துவான்
திரு. வ. செல்லையா
**Mr. V. Chellaiah**

நிர்வாக ஆசிரியர்
திரு. செ. நவநீதகுமார்
**Mr. C. Navaneethakumar**

பதிப்பாசிரியர்
திரு. பொ. விமலேந்திரன்
**Mr. P. Vimalendran**
*Unie Arts (Pvt) Ltd*
*Tel.: 330195, 478133*
*E-mail:uniearts@slt.lk*

மதியுரைஞர்
பண்டிதர் ச. சுப்பிரமணியம்
**Pandit S. Subramaniyam**

திரு. பொ. பாலசுந்தரம்
**Mr. P. Balasundaram**
*Trustee*
*Sri Varatharaja Vinayagar Temple, Kotahena*

திரு. ராஜராஜேஸ்வரன் தங்கராஜா
சட்டத்தரணி
**Mr. Rajarajeswaran Thangaraja**
*Attorney-at-Law*

திரு. கு. மகாலிங்கம்
**Mr. K. Mahalingam**
*Sivayogaswami Trust Fund*

திரு. அ. கந்தசாமி
**Mr. A. Kandasamy**
*Chairman, U. P. S.*

**42, Janaki Lane,**
**Colombo 4.**

## அஞ்சல் நெஞ்சே

அன்றாடம் நம் வாழ்விலே துன்பம், துயரம் வாட்டி வதைக்கிறது. இதனால் மனத்திலே நிம்மதி இல்லை. துன்ப வாழ்வை யார் தான் விரும்புவார்? துன்பமில்லாத வாழ்வு வேண்டும் என்று தானே எதிர் பார்க்கிறோம். இதற்கான வழியைத்தேடி அலைகிறோம். எம்மால் முடியும் என்று முயன்று முடியாத நிலையில் இறைவனைச் சரணடைகிறோம்.

ஒருமுயலை வேட்டை நாய் துரத்திச் செல்கிறது. முயல் தன்னால் முடியுமளவிற்கு வேகமா ஓடுகிறது. நாயிடமிருந்து தப்பினால் தன் திறமையினால் தப்பினேன் என்று நினைக்கும் முயல். தப்பமுடியாது என்ற நிலைமையில் இறைவா என்னைக் காப்பாற்று என்று வேண்டிக் கொள்ளும். இந்த நிலைதான் எமக்கும்.

"எது எப்படி நடக்குமோ அது அப்படித்தான் நடக்கும்" என்பதை ஏற்றுக் கொள்ளும் பக்குவம் எம்மிடம் இல்லை. என் செயலாவது யாதென்றுமில்லை யாவும் உன் செயலே என்றெண்ணி இறைவனைச் சரணடைந்து அவன் பாதத்தைப் பற்றினால் துன்பமில்லை. துயரில்லை. அவன் பாதம் அயன் கை எழுத்தை அழிக்கவல்லது. பாதத்தில் வீழ்ந்து பணிந்த சந்திரனைச் சடா முடியில் வைத்த பரம கருணாநிதி அவன். பாதம் தொழுவார் பாவம் தீர்ப்பான். அவன் கழலிணையிருக்க எதற்கு அஞ்ச வேண்டும். மார்க் கண்டனுக்காய் வந்த கூற்றினை உதைத்த திருவடி எமக்கு வருந்துன்பத்தையும் விலக்கி இன்பத்தை அருளும்.

இம்மாத இதழ் மாத்தளை அருள் மிகு முத்துமாரி அம்பாள் மகோற்சவச் சிறப்பு மலராக வெளிவரத்துணை நின்ற அனைவருக்கும் அம்பாள் அருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

*மண்பாதலம் புக்குமால் கடல் மூடி மற்றேழுலகும்*
*விண்பாற் றிசை கெட்டு இருசுடர் வீழினும் அஞ்சல் நெஞ்சே*
*திண்பா னமக் கொண்று கண்டோந் திருப்பாதிரிப் புலியூர்க்*
*கண்பாவு நெற்றிக் கடவுட் சுடரான் கழலிணையே*

அப்பர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சைவநீதி

## உள்ளே...........


1. அஞ்சல் நெஞ்சே – ஆசிரியர் ........................................ 1
2. பொருளடக்கம் – ........................................ 2
3. பாதார விந்தங்களைப் பணிகின்றேன்
– சிவஸ்ரீ சிவாநந்தக் குருக்கள் ........................................ 3
4. இன்புறு நிலை – உமாபதிசிவம் ........................................ 3
5. அறங்காவலர் சபைத் தலைவரது செய்தி
– ச. சந்திரசேகரம் ........................................ 4
6. அம்பாளின் திருப்பணி தொடர அருளாசி வேண்டித் துதிப்போம்
– ரெங்கசாமி அரசசிங்கம். ........................................ 5
7. அனைத்து அடியார்களுக்கும் அன்னையின் ஐஸ்வரியங்கள் கிட்டுவதாக
– செல்லையா ஜெயராஜ் ........................................ 5
8. முத்துமாரி அம்மை பேரில் ஊஞ்சல்
– முருகேசபிள்ளை ........................................ 6
9. மாத்தளை அருள்மிகு முத்துமாரியம்மன் தேவஸ்தான விஷேட திருவிழாக்கள் ........................................ 7
10. காத்தருள்வாள் எம்மை மாத்தளை முத்துமாரி
– சண்முகம் சந்திரசேகரம் ........................................ 8
11. மாத்தளை முத்துமாரிம்பிகை பதிகம்
– அடியவன் ........................................9
12. அன்னை முத்துமாரி
– ராஜ்சிவா சிவலிங்கம் ........................................ 10
13. கல்வி வளர்ச்சியில் எமது ஆலயம்
– செ. இராஜகுலேந்திரன். ........................................12
14. புஷ்ப விசேடம் – சிவஸ்ரீ ச. குமாரசாமிக் குருக்கள் ........................................13
15. சித்தாந்த நூல்கள் தெளிவு செய்திறம்
– இயற்றமிழ் வித்தகர் பண்டிதர் ச. சுப்பிரமணியம் ........................................14
16. மூதுரையின் மிகப் பெரிய மேன்மை
– முருகவே பரமநாதன் ........................................ 17
17. சிறுவர் சிந்தனையில் - நான் விரும்பும் பெரியார்
– யோ. சங்கர் ........................................ 19
18. மகா சிவராத்திரி – ப. வத்சலா ........................................ 20
19. மாசி மகம் – மாதினி ........................................ 21
20. நினைவிற் கொள்வதற்கு – ........................................ 22
21. சைவ வினாவிடை.– ஆறுமுகநாவலர் ........................................23
22. **LINGODBHAVAR** ........................................26
23. **SHAIVAISM – S. Shivapadasundaram** ........................................ 27
24. சைவசமய அறிவுப் போட்டி ........................................ 29
25. போட்டி இல. 3 - விடைகள் ........................................ 30


சைவநீதி இதழில் வரும் கட்டுரைகளிலுள்ள கருத்துக்களுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர்

– இதழ் நிர்வாகிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதார விந்தங்களைப் பணிகின்றேன்

எமது இலங்கைத் திருநாட்டில் மத்திய பகுதியில் பண்ணகாமம் எனும் திவ்விய சேத்திரத்தில் திரு உருக் கொண்டு எழுந்தருளி அருள் சுரக்கும் மாத்தளைச் ஸ்ரீ முத்துமாரியம்பிகையின் திருவருளால் மாத்தளை மாநகரமே மலைவளத்தாலும் கலை வளத்தாலும் மாண்புற்று விளங்குவது யாவரும் அறிந்த உண்மையே.

இத்தனை சிறப்பு மிக்க எமது அன்னை ஸ்ரீ முத்துமாரியம்பிகையின் திருவருளால் எமது நாட்டில் சாந்தியும் சமாதானமும் கிட்ட அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகி மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்பிகையின் பாதார விந்தங்களைப் பணிகின்றேன்.

பஞ்சரத பவனி சீரும் சிறப்புமாக இடம் பெறப், பக்தர்கள் அனைவரும்
திருவருட் கடாட்சத்தைப் பெற்றுய்யப் பிரார்த்திக்கின்றேன்.

இவ்வண்ணம்

சிவஸ்ரீ சிவாநந்தக் குருக்கள்

*(பிரதம சிவாச்சாரியார்)*

*ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம்,*

*மாத்தளை.*

# இன்புறு நிலை

- உமாபதி சிவம் -

இன்புறு நிலை, இன்பு – உறும் – நிலை ஆக மூன்று சொற்களாலாகியது. இன்பு – இன்பம், அதாவது பேரின்பம். உறுதல் – அடைதல். நிலை என்றுமொரு தன்மைத்தாயுள்ள இயல்பு. இன்புறுநிலை என்பது – மேலைச் சூத்திரத்தில் கூறியபடி அருள் ஒளியிலடங்கிய யான் எனது என்னுஞ் செருக்கற்றுத் தூய அருளொளியாய் விளங்குகிற மாந்தர், இறைவனோடு இரண்டறக் கலந்து, அவன் திருவடி நிறைவிலடங்கிப் பேரின்பமடையுமியல்பு என்று பொருள்படும். இந்தப் பேரின்பம் ஆன்மலாபம் என்றும், சிவப்பேறு என்றும், திருவடிப்பேறு என்றும், நேயத்தழுந்தல் என்றும் சித்தாந்த நூல்களிற் கூறப்படும். இது சிவஞானபோதம் 11–ஆம் சூத்திரத்தில் "அயரா அன்பி னரன்கழல் செலுமே" என்பதில் கூறப்படுகின்றது. இதுவே மாந்தர் நிட்டை உணர்வினால் உலகவாழ்வின் பெரும் பயனாக முடிவில் அடையப்பெறும் சிவபோகம்.

ஆசிரியர், மேலையதிகாரத்தில் மாந்தர், அருள்ஒளியில் அடங்கி, யான் எனது என்னுஞ் செருக்கற்றுத் தூய அருளொளியாய் விளங்கி, சிவதரிசனம் கண்டு சிவயோகஞ் செய்தலைக் கூறி, இந்த அதிகாரத்தில் அச் சிவயோகத்தால் அடையப்பெறும் சிவப்பேறாகிய இன்புறும் நிலையைக் கூறுகின்றார். இதனாலே இவ்வதிகார இயைபு இனிது விளங்கும்.

இவ்வதிகாரத்திலுள்ள ஐந்து பாட்டுக்களும், மேலை அதிகாரத்திற் கூறப்பட்டபடி. சிவயோக நிலையையடைந்த மாந்தர் சிவனை அடைந்து பேரா இயற்கைப் பேரின்ப வாழ்வு பெறுதலைக் கூறுகின்றது. இந்தப் பேரின்ப வாழ்வுணர்வு பிறரால் கேட்டறியப் படாத பெருந்தகைமை யுடையதாதலினால் இப்பாட்டுக்களில் ஒன்றுக்கொன்று ஏற்றமும் வேற்றுமையும் கூறமுடியாது.

நன்றி: தேவாரஅருள் முறைத்திரட்டு

******

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான

# அறங்காவலர் சபைத் தலைவரது செய்தி

அம்பிகையின் திருவருளால் 2000 ஆம் ஆண்டு வருடாந்தத் தேர்த்திருவிழாவை முன்னிட்டு, இம்மாதச் "சைவநீதிச்" சஞ்சிகை எமது ஆலய மகோற்சவச் சிறப்பிதழாக வெளியாவது குறித்து நாம் பெருமகிழ்ச்சியும், பெருமிதமும் கொள்ளுகின்றோம்.

மத்திய மாகாணத்தின் கண் மங்காப் புகழுடன் திகழும் மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான மாசிமக மகோற்சவம் வருடாவருடம் வெகுசிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இது அகில உலகமே அறிந்த ஒரு விடயமாகும்.

சாந்தி சமாதானம் நிலவும் ஒரு சாந்தமான உலகம் உதயமாக வேண்டுமென ஏங்கிக் கொண்டிருக்கும் ஒரு காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆத்மீக வழியில் நாம் அனைவரும் வழிநடத்தப்படுவதன் மூலமே இது சாத்தியமாகும்.

குறிப்பாக, நமது இளம் சந்ததியினர் தமது எதிர்காலத்தை ஒளிமயமானதாக அமைத்துக்கொள்ள வேண்டுமென்று துடியாய்த் துடித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆலய வழிபாடுகள் மூலம், ஆத்மீக வழியில் மக்கள் வழிநடத்தப்பட்டு, இக்குறிக்கோளை நிறைவேற்ற முடியும் என்பது எனது அசையாத நம்பிக்கையாகும். எனவே எமது ஆலயத்தில் அவற்றிற்கான வழிசமைத்து செயற்பட்டு வருவது எல்லோரும் அறிந்த விடயமாகும்.

நான் சபையின் தலைமைப் பொறுப்பை ஏற்றது முதல், அம்பாள் சேவையில் முழு மனதுடனும், பக்தி சிரத்தையுடனும் என்னை அர்ப்பணித்துச் செயற்பட எனக்கு அம்பிகையின் திருவருள் கிட்டியுள்ளமை பெரும் ஆத்ம திருப்தியைத் தருகின்றது. அன்றியும், சபை உறுப்பினர்கள் அனைவரினதும் பூரண ஒத்துழைப்பும், அவ்வப்போது அவர்கள் வழங்கி வரும் ஆலோசனைகளும் எமது தெய்வப்பணியான தொண்டினைச் செவ்வனே செய்வதற்கு உறுதுணையாக அமைகின்றன.

உயர்திரு த. மாரிமுத்துச் செட்டியார் அவர்கள் தலைவராக இருந்து தெய்வப்பணி புரிந்த காலத்தில் 1992 முதல் 1994 வரை நான் செயலாளராகப் பணியாற்றக் கிடைத்தமை ஒரு பெரும்பாக்கியமாகக் கருதுகிறேன்.

அக்கால கட்டதில் தான் 1983ல் அழிக்கப்பட்ட சித்திரத் தேருக்குப் பதிலாக அம்பிகையின் திருவருளால் புதிதாக ஒரு சித்திரத் தேர் உருவாக்கப்பட்டு, வெள்ளோட்டம் விடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. வடக்கு வெளிவீதி, 108 அடி இராஜகோபுரம் அமைக்கும் திருப்பணித் திட்டங்களெல்லாம் இக்காலப்பகுதியில்தான் ஆரம்பிக்கப்பட்டன.

இலவசத்தட்டச்சுப் பயிற்சி வகுப்பு, பாலர் பாடசாலை போன்ற கல்வி வளர்ச்சிக்கான வேலைத்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டுத் தொடர்ந்தும் செயற்பட்டுவருவதும் ஒரு சிறப்பேற் பாடாகும்.

பொதுமக்களது பேராதரவும், வள்ளற் குணம் படைத்த, வாரி வழங்கும் வசதி படைத்தவர்களது பேருதவிகளும் எமது பணிகள் மிகவும் எளிதாக நிறைவேற உதவியாக அமைகின்றன.

இனமத பேதமின்றி, எல்லாப்பொதுமக்களும் அரசியல் பேதமின்றிச் சகல அரசியல்வாதிகளும் எமக்கு நல்கிவரும் பேராதரவும், ஒத்துழைப்பும் உதவிகளும் எமது ஆலய வளர்ச்சிக்கு உறுதுணையாகவும், உந்துசக்தியாகவும், அமைகின்றன.

"சைவநீதிச்" சஞ்சிகை வளமான வளர்ச்சி பெறவும், சைவ உலகம் தழைத்தோங்கவும், எல்லாம் வல்ல மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பிகையின் அருட்கடாட்சம் கிட்ட வேண்டும் என்று, பிரார்த்திக்கின்றோம்.

ச. சந்திரசேகரம்,
அறங்காவலர் சபைத் தலைவர்
அருள் மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம்,
மாத்தளை.

❋❋❋❋❋❋

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பாளின் திருப்பணி தொடர அருளாசி வேண்டித் துதிப்போம்

மலையக மக்களின் வாழ்க்கையோடு மட்டுமன்றி இந்நாட்டு வரலாற்றிலும் இழையோடி, இன மத மொழி பேதமின்றி எல்லோருக்கும் அருள்பாலிக்கும் அன்னை முத்துமாரியாவாள்.

மாரியென்றல் கருணைத் தெய்வமாகும். மழைபோல் பொழிந்து அருள் புரிவது அவள் இயல்பு கேட்போருக்குக் கேட்ட வரம் அருளும் கொடைத்தெய்வம். நமது தாயைப் போல் நம் குற்றங்களையெல்லாம் மன்னித்துக் குறைகளை யெல்லாம் பொறுத்து அளவற்ற அன்பைச் சுரந்து நம்மைக் காத்து இரட்சிக்கும் மாதா மாத்தளை முத்துமாரியாவாள்.

பண்டைய மன்னர்கள் காலம் தொட்டு இற்றைவரை மொழி, சமய பேதங்களைக் கடந்து ஐக்கியமாக ஒரு குலமென வாழும் நம் மக்களை மாத்தளைப் பதியில் சித்திரத்தேரேறி எம்மையெல்லாம் இரட்சித்துக்காக்கப் பவனிவரும் அன்னை முத்துமாரியின் அருள் வேண்டி இந்நாளிலே துதிப்போம்.

இவ்வருட மகோற்சவம் இனிதே நிறைவுபெறச் சகல வகையிலும் ஒத்துழைப்பினையும் பேராதரவினையும் நல்கி வரும் அனைவருக்கும் எமது பணிவன்பான நன்றி யினைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன் அம்பாளின் திருப்பணிகள் தொடர அனைவரையும் நேசக்கரம் நீட்டி அழைக்கின்றோம். அன்னையின் அருள் அனைவருக்கும் கிட்ட வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

இப்படிக்கு
ரெங்கசாமி அரசசிங்கம் J.P.
(உபதலைவர்)

ஸ்ரீ முத்துமாரியம்மன்
தேவஸ்தான அறங்காவலர் சபை
மாத்தளை.

## அனைத்து அடியார்களுக்கும் அன்னையின் ஐஸ்வரியங்கள் கிட்டுவதாக

ஈழத்திருநாட்டின் இந்துக்கோயில்களில் ஈடில்லாத் தனிப்பெருமை கொண்டது மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம். இது மலையும், நதியும், வயலும் வரம்பும் சோலையும் சூழ்ந்து வனப்புடன் விளங்கும் அழகிய திருப்பதியில் அமைந்துள்ளதைக் காணும் போது எமது நெஞ்சங்கள் சொல்லமுடியாத அளவிற்கு அடையும் பக்தி பரவசத்திற்கு அளவேயில்லை.

இவ்வுலகத்தில் உள்ள ஜீவராசிகள் அனைத்துக்கும் அருள் சுரக்கும் வகையில் அம்பிகை ஆண்டுதோறும் மாசிமகத்தில் புறப்பட்டு பவனிவருவது அவள் அருட்செயல். இது மகத்துவம் வாய்ந்தது.

மலையக மக்களுக்கு மட்டுமின்றிச் சகல இனத்தவர்களுக்கும் எம்மன்னை பொதுத்தெய்வம். சகலரும் அவள் திருமுன் ஓரினம். அனைவரும் ஓர் இனம் என்ற மனப்பான்மையுடன் அன்னை பராசக்தி முத்துமாரியைக் காலம் காலமாக வழிபட்டு வருவது நாம் காணக்கூடியதே.

இத்தகைய பெருமைமிக்க அருள்நிறைந்த ஸ்ரீ முத்துமாரியம்பிகையின் பஞ்சரதோற்சவம் இலங்கைத்திருநாட்டிலே ஓர் சிறப்பு வாய்ந்ததும் மகிமைமிக்கதுமான திருவிழாவாகும், இக்கோலாகமான பக்தி பரவச விழாவிற்குப் பல பாகங்களிலிருந்தும் அன்பர்கள் வருகை தந்து பக்தி பரவசத்துடன் அன்யையை வணங்கி அருட்கடாட்சம் பெறுவதுண்டு. இத்தகைய சிறப்புமிக்க தேசியவிழா இவ்வாண்டும் (2000.02.19) மிகச் சிறப்பாகப் பக்திபூர்வமாக நடைபெறுகின்றது.

இந்த மங்களகரமான நன்நாளிலே அன்னை பராசக்தி அகிலாண்டேஸ்வரி ஸ்ரீ முத்துமாரியம்பிகையின் பாதகமலத்தைத் தரிசித்து அஷ்டைஸ்ரியங்களையும் பெற்று இப்பூலகில் சிறப்புடன் வாழ்வோமாக.

சுபம்

இங்ஙனம்
செல்லையா ஜெயராஜ்
*செயலாளர்*
*ஸ்ரீ முத்துமாரியம்மன் வேதஸ்தானம், மாத்தளை.*

******

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்துமாரி அம்மை பேரில்
# ஊஞ்சல்

- முருகேசபிள்ளை -

*காப்பு*

திருமேவுநய முகனை வென்று நா ளுஞ்
செய்யபன்ன கமப்பதியிலினிதுவா மூங்
கருமேவுமடியர் வினைகடிதின் மீ ளுங்
கவுரிதிரு வூஞ்சலெனுங் கவிக்கெந் நாளும்
பருமேவு குடிலைமதி பரந்துநீ ளும்
பராபரன் றனிடப் புறத்தே பதிந்துவா மும்
அருமேவு மம்பிகைதன் மகவதா கும்
ஐங்கரனே துணையாக ஆடீரூ ஞ்சல்.

*நூல்*

மிடல்பொருவுமேருகிரிதனக் கொப்பாக
விளங்கிய பொற்சிகரமதின் மேலன்பாகக்
கடன்மதித்துமங்குலங்கள் படிந்துமாரக்
கவின்செய்தகோவையென வழகுகூரப்
படமிகுத்த உம்பர்காளரங்கள் போலப்
பகரரியபலசுடர்கள் பரிந்துகாலத்
திடமிகுத்த அவையாகுமரங்கத்தேறிச்
சிவகாமிமாரி அம்மை ஆடீரூஞ்சல். 1.

அறைவரிய பிரபலமாமறைகள் நான்கும்
அணைந்ததூணாக விட்டங்கலைகளாகப்
பெறவரிய அறுசமையங்கயிறதாகப்
பேசரிய ஆகமங்களணையதாகக்
குறைவரியபுராணங்கள் பலகையாகக்
கோதில்சங்கப்பீடமதின் மேலன்பாக
நிறைவுடனே யெழுந்தருளி அடியார்போற்ற
நீடருளாய்மாரி அம்மை ஆடீரூஞ்சல். 2.

கண்ணகன் ஞாலந்துப்பாய்வயிரங்காலாய்க்
கருதுமாணிக்க உத்ரக்கவின் செய்பாலாய்ப்
பண்ணமைந்தநவவச்ர பறளையாக்கிப்
பதுமராகத்திடை யேபருமல்தேக்கி
வண்ணமைந்தமரகதநற்றகடுதாவி
வளமிகுந்த மண்டபத்தின் மகிழ்வாய்மேவி
விண்ணமையும் பன்னகமப்பதியை ஆண்டு
மேவுகவுமாரி அம்மை ஆடீரூஞ்சல். 3.

துங்கமுறுமதில்படி கசந்திரகாந்தத்
துகளறுநன்மணியாலும் படிவங்காலப்
பங்கமில்லாப்பவளத்தாற் பலகையாக்கிப்
பகர்புட்பராகத்தாற் சதுரந்தேக்கிச்
சங்கமுறவிடையில் நவமணிகளாலுந்
தரித்தசித்ரமண்டபத்திற்றகைமைசால
விங்கிதமாயெழுந்தருளி அடியார்போற்ற
விறைவிகவுமாரி அம்மைஅ ஆடீரூஞ்சல். 4.

பம்பைதுடி முரசுபேரிகைகளார்ப்பப்
பலதொனிகாகளமார்ப்பவிரலையார்ப்பக்
கும்பமுனிமறையோர்கள் குழுமியார்ப்பக்
கோதில்துத்திவலம்புரிகள் குமிறியார்ப்பத்
தம்பமுறுதேவதுந்துபிகளார்ப்பச்
சல்லரிகொக்கரைபடகந்தண்ணென்றார்ப்ப
விம்பமதாயெழுந்தருளி அடியார் போற்ற
மேவுகவுமாரி அம்மையே ஆடீரூஞ்சல். 5.

இந்திரனும்மாலயனும் வடந் தொட்டாட்ட
இறையவரும்மறையவரும்வடந்தொட்டாட்டச்
சந்திரருஞ்சூரியரும் வடந்தொட்டாட்டத்
தானவரும்வானவரும்வடந்தொட்டாட்டக்
கொந்தலருங்குழன்மாதர்வடந்தொட்டாட்டக்
கோமுனிவர்கணநாதர்வடந்தொட்டாட்டச்
சிந்தைமகிழ்தொண்டர்களும் வடந்தொட்டாட்டத்
தேவிகவுமாரி அம்மை ஆடீரூஞ்சல் 6.

மேகநிகர் குழலசைப்பணிகளாட
விளங்கியகுண்டலங்கொப்புமின்னியாட
வேகனையசுடிபக்கம்விளங்கியாட
மேகலைநற்சிறுசெச்சைமிளிரென்றாட
வாகனையபாணியணிகிள்ளையாட
வயங்கியநூபுரச்சிலம்புகலிரென்றாடப்
பாகனையபங்கயப்பொற்பாதமாடப்
பரிந்துறையும்மாரியம்மையாடீரூஞ்சல் 7.

அடியாரைக் காத்திரட்சித்த அமலையாகி
அருள்மருவப்பன்னகமத்தினி தின்மேவிப்
படியமுகில்வலை சொரிந்தருள்வதென்னப்
பகரரியபலகருணைவிளைவாய்த்துன்னக்
கொடியெனும்நுண்மருங்கசையச் செய்யபாதக்
கொலுவசையத் தொண்டர்கரங்குவித்துப்போத
வடிவுடனேயிவர்ந்துபலதருமம்வாழ
வலாரிமாமாரி அம்மை ஆடீரூஞ்சல். 8.

துங்கமுடனெழுந்தருளி அடியார்தங்கள்
தொல்வினைகள் மாற்றிடவேசோதியாகி
எங்குநிறைசரமசரமனைத்தினுள்ளும்
ஏகாந்தரூபியென எழுந்துவிள்ளும்
பங்கமிலா தென்வினையும் நீக்கியாண்டு
பலகருணைவிளைவாகித் தொண்டாய்நின்றோர்க்
இங்கிதமாய்க் கமலத்திலினிதின்மேவும்
இறைவிகவுமாரியம்மை ஆடீரூஞ்சல். 9.

பார்வாழ்கமறைவாழ்கசைவம் வாழ்க
பகரரியபலதொண்டர்நாளும் வாழ்க
ஏர்வாழ்கமங்கையர்கற்பினிது வாழ்க
வின்பமுடனரசர் செங்கோல்நாளும் வாழ்க
தாரனையபன்னகமத்துள்ளோர் வாழ்க
தருகவிசொன்னோர் கிளைகள் தளிர்த்தே வாழ்க
நேரனைய அம்மை சிவாலயமும் வாழ்க
நிறைமாரியருள் வாழ்க ஆடீரூஞ்சல். 10.

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு. 1.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் சக்தி

# மாத்தளை அருள்மிகு முத்துமாரியம்மன் தேவஸ்தான விசேஷ திருவிழாக்கள்

**சித்திரை மாதம்**

1. வருஷப்பிறப்பு உள்வீதித் திருவிழா
2. சித்திரா பூரணை உள்வீதி.

**வைகாசி மாதம்**

1. வைகாசி விசாகம் உள்வீதி.

**ஆனி மாதம்**

1. மாணிக்கவாசகர் குருபூசை.
2. ஆனி உத்தரம் உள்வீதி (நடேசர் அபிஷேகம்).

**ஆடி மாதம்**

1. ஆடிவேல் உள்வீதி உபயம்.
2. ஆடி அமாவாசை உள்வீதி உபயம்.
3. ஆடிப்பூரம் உள்வீதி உபயம்.

**ஆவணி மாதம்**

1. விநாயக சதுர்ப்தஶ்ரீதி உள்வீதி.
2. ஆவணி மூலம் உள்வீதி உபயம்.
3. ஶ்ரீ முத்துமீனாட்சி சமேத சோம சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணம்.

**புரட்டாதி மாதம்**

1. நவராத்திரிக் கொலுப்பூஜை.
2. மகிடாசூரசம்மார உற்சவம், சரஸ்வதி பூஜை
3. விஜயதசமி, மானம்பு உற்சவம்.
4. அன்ன ஊஞ்சல் உள்வீதி உபயம்.
5. கேதாரகௌரி லட்சார்ச்சனை உபயம்.
6. சனீஸ்வர யாகம்.

**ஐப்பசி மாதம்**

1. தீபாவளித் தீபாராதனை.
2. கந்தஷஷ்டி உற்சவம்.
3. சூரசம்மார உற்சவம்.
4. சண்முகர் திருக்கல்யாண உற்சவம்.

**கார்த்திகை மாதம்**

1. சோமவார பூஜை உற்சவம்.
2. குமாராலய தீபம் உள்வீதி.
3. 21, நாள் விநாயக சஷ்டி லட்சார்ச்சனை.

**மார்கழி மாதம்**

1. திருப்பள்ளியெழுச்சிப் பூஜை.
2. திருவெம்பாவைப் பூஜை.
3. சுவர்க்கவாயில் ஏகாதசி உபயம்.
4. ஆருத்திராதரிசனம் உள்வீதி.

**தை மாதம்**

1. தைப்பொங்கல் உள்வீதி.
2. வருஷாபிஷேகம் (1008, சங்காபிஷேகம்).
3. வருஷாபிஷேகம் உள்வீதி.

**மாசி மாதம்**

1. வருடாந்த மாசிமக மகோற்சவம். (தேர்த்திருவிழா)
2. மகா சிவராத்திரி.

**பங்குனி மாதம்**

1. பங்குனி உத்தரம் உள்வீதி

ஒவ்வொரு மாதத்திலும் வரும் பூரணைத் தினத்தன்று மாலை 5.30 மணிக்கு ஶ்ரீ சக்ரயந்திர பூஜையும், சுமங்கலி தீப பூஜையும் நடைபெறும்.

ஒரு பந்தியில் பலர் உட்காரும் போது முன்னதாகச் சாப்பிடக் கூடாது. சாப்பிடலாம் என்று பெரியவர்கள் கூறிய பின்னோ அல்லது அவர்கள் சாப்பிட ஆரம்பித்த பின்போ சாப்பிட வேண்டும். பெரியவர்கள் எதிரில் கால் மீது கால் போட்டுக் கொண்டோ தொடையை ஆட்டிக் கொண்டோ தாளம் போட்டுக் கொண்டோ சாப்பிடக் கூடாது.

As the letter A is the first of all letters,
so the eternal God is first in the world. 1.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்தருள்வாள் எம்மை மாத்தளை முத்துமாரி

- சண்முகம் சந்திரசேகரம் -
*தலைவர், அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான அறங்காவலர் சபை, மாத்தளை*

விண்ணையும் மண்ணையும் காத்தருளும் எம் அன்னை பராசக்தி ஈழத்து மதுரை என்ற பெயர் பூத்த மாத்தளை நகரில் ஸ்ரீ முத்துமாரி என்ற திருநாமத்தோடு வீற்றிருந்து பக்தர்களுக்கு அருள்பாலித்து வருகிறாள். மலையகத்தின் வடக்கு வாயிலெனத் திகழும் மாத்தளை பல்வேறு வகையான சிறப்புக்களை உடையது.

சங்க கால இலக்கியங்களில் கூறப்படும் குறிஞ்சி, முல்லை, மருதம் ஆகிய மூவகை நிலங்களின் சிறப்பம் சங்களையும் தன்னகத்தே கொண்டது. இத்தகைய சிறப்புக்கள் பல ஒருங்கே அமையப் பெற்ற மாத்தளை நகரில் அன்னை முத்துமாரி "குற்றாலம்" என ஏழு அருவிகள் கொட்டும் அழகு மலைக் குன்றுகளுக்குக் கிழக்கே மகாவலி கங்கை கலந்து புரண்டோடும் சுது கங்கைத் தீர்த்தத்திற்கு மேற்கே சுனங்காமம் பிள்ளையார் ஆலயத்திற்கு வடக்கே வெள்ளைக் கல் ஸ்ரீ அழகர் பெருமான் ஆலயத்திற்குத் தெற்கே மந்தண்டாவளை வழிப்பிள்ளையார் கோயில், ஸ்ரீ முத்து விநாயகர் ஆலயம், ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமிகள், ஸ்ரீ ஏழு முகக் காளியம்மன் ஆலயம் ஆகிய ஆலயங்கள் நாற்புறமும் புடைசூழ நடுவே கோவில் கொண்டு எழுந்தருளி மாத்தளை மாநிலத்தைக் காக்கின்றாள் மாசி மக நாயகி மாத்தளை முத்துமாரி.

மகிமை பெற்று விளங்கும் மாத்தளை முத்துமாரியின் வரலாற்றை நோக்குமிடத்து, ஏறத்தாழ 150 வருடங்களுக்கு முன் ஸ்தல விருட்சமாகிய வில்வ மரத்தின் அடியில் அமர்ந்து அருள்பாலிதாள். அம்பிகை. எம்மை எல்லாம் காத்தருளும் அன்னையின் வரலாற்றை நோக்குவது அவசியம் என்று நினைக்கின்றேன். காரணம், வரலாறு பலரால் மறக்கப்படுகின்றது, மறைக்கவும்படுகின்றது. மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் சிறப்புப் பெற்று விளங்கக் காரணம் வளர்ச்சிக்கு உதவிய பெரியார்களும் மாத்தளை வாழ் தமிழ் அடியார்களும் எனின் மிகையாகாது. இவர்களை இத்தருணத்தில் நன்றி கூறுவதும் நினைவுபடுத்துவதும் சாலச் சிறந்தது.

மேலும் நம் வாழ்க்கையில் மேன்மை அடைவதற்குக் கடவுள் வழிபாடு இன்றியமையாதது. இவ்வுண்மையை உணர்ந்து ஆன்மீகத் துறையில், ஆன்மீகத் தொண்டையும் பொதுப் பணிகளையும் நுணுக்கமாவும், மிகவும் கண்ணியமாகவும் செய்து வரும் தற்போதைய நிர்வாகக் குழுவுக்கும் ஆலய குருமார்களுக்கும் நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். இவர்களோடு மாத்தளை வாழ் சைவ அடியார்களும் மேலும் இவ் ஆலயத்தின் திருப்பணிகளுக்கு என்னுடன் தோள் கொடுத்து உதவுவார்களாயின் இப்புத்தாயிரமாம் ஆண்டிலே – நூற்றி எட்டு அடி உயரம் கொண்ட, வடக்கு வாயில் ராஜகோபுரத் திருப்பணிகள் தொடர வாய்ப்பாக இருக்கும் என்பதை இச் சந்தர்ப்பத்தில் கூற விரும்புகிறேன்.

மலையகத்தின் மாண்பு நகராம் மாத்தளையில் தேரோட்டம், குவலயமக்கள் பெருங் கூட்டமாய்க் கண்டு களிக்கவும், பகைவரும் வந்து பணியும் பக்தித் தோரோட்டமாக வரப் போகிறது பஞ்சரத பவனி. எதிர்வரும் 19. 02. 2000 அன்று மலையிலே பிறந்து முக்கண்ணனுக்கு மாலையிட்ட மாதரசி ஸ்ரீ முத்துமாரி சித்திரத்தேரினில் பவனி வருகையிலே அவளுடன் ஓமெனும் நிலையிலே ஒளியாய் திகழும் பஞ்சமுக விநாயகனும் பானுகோபன் தலை பத்து கோடியாக துணுக்குற கோபித்த வடிவேலன் வள்ளி தெய்வயானையுடனும், திரிபுரம் எரித்த இறைவன் ஸ்ரீ சோம சுந்தரேஸ்வரராக இறைவியுடனும், சண்டேஸ்வரியுடனும் அடியார்களுக்கு அருள் வேண்டி எழுந்தருள்வார்கள்.

"மாசி மக நாளன்று
முக்குச் சுடர் வான் வெளியில்
முழுநிலவு ஒளிபடைக்கு
அகிலத்தை யாளும் சக்தியின்
அருட்பாலைப் பருக"

அகில இலங்கை சர்வ மதத்தினரையும் இரு கரம் கூப்பி அழைக்கின்றேன்.

*"மலையகம் மேவிடும் மாத்தளை நாயகி
மாரியின் திருவடியே சரணம்!"*

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றா டொழா அ ரெனின். 2.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# மாத்தளை முத்துமாரியம்பிகை பதிகம்

- அடியவன்

பொன்னார் கமல மலர்த்தடமும்
பூத்துக் குலுங்குந் தண்பொழிலுந்
தென்னை கமுகந் தோப்புகளும்
செந்த மிழ்நே ரோடைகளும்
மன்னு மின்ப வளப்பதியாம்
மாத்த ளைக்கண் மகிழ்ந்துறையும்
அன்னை முத்து மாரியம்பாள்
அடிக ளெங்கட் காந்துணையே. 1.

ஒளிகா லுன்றன் மேனிபச்சை
உடுத்தி ருக்குஞ் சேலைபச்சை
தளிசூழ் பூங்கா வதுபச்சை
சரணா முன்றாட் டளிர்பச்சை
அளிகா ணுன்ற னகம்பச்சை
அடியே மெம்மீ திரக்கமின்றோ
மொழியொ ணாச்சீர் மாத்தளைவாழ்
முத்து மாரி யம்பிகையே. 2.

சொத்துச் சுகங்க ளற்றிருந்துஞ்
சோம்ப லோய்வு சற்றுமின்றி
முத்து முத்தாய் வியர்சிந்தி
முடிவில் மண்ணுக் கிரையாகச்
செத்து வீழு மெம்மையின்னுந்
திரும்பிப் பாரா திருப்பதுமென்
முத்து மூங்கில் மாத்தளைவாழ்
முத்து மாரி யம்பிகையே. 3.

வாழு கின்றாய் மாத்தளையில்
வணங்கு மன்பர் நோத்தளையில்
வீழு கின்றார் சாத்தளையில்
மேவு மென்றன் நாத்தழைத்து
நீளு மின்பப் பாத்தளையில்
நிலைக்கும் பான்மை கொள்ளுவையோ
மூளு மிடர்காய் மாத்தளைவாழ்
முத்து மாரி யம்பிகையே. 4.

தோட்டத் தோயா துழைத்துழைத்துத்
துரும்பாய்க் கொய்வர் தேயிலையே
வாட்டத் திருக்கு மவர்தம்மை
மனதிற் கொள்ளு வாயிலையே
ஊட்டச் சத்தை யுறிஞ்சுமவ
ரொழிந்து போகக் காயிலையே
மூட்ட முகிலின் மாத்தளை வாழ்
முத்து மாரி யம்பிகையே. 5.

தேங்கு வளங்க ளிலங்கைக்குச்
சேர்த்து வைக்குந் தொழிலாளி
ஏங்கு நிலையிற் சேருரிமை
யேது மின்றி மாய்கின்றான்
தாங்கு பரிவில் தறுகண்ணர்
தலையெ டுக்கா தோட்டிடுவாய்
மூங்கில் முத்த மாத்தளைவாழ்
முத்து மாரி யம்பிகையே. 6.

வீடு வாச லில்லாமல்
வேண்டு முணவு மில்லாமல்
நாடு கல்வி யில்லாமல்
நவிலு முரிமை யில்லாமல்
வாடு கின்ற எங்களைநீ
மறந்து போன தெம்விதியோ
மூடு மழைக்கார் மாத்தளை வாழ்
முத்து மாரி யம்பிகையே. 7.

அன்னை யவள்தான் பிள்ளைகளுக்
காகி லிடர்கள் பொறுப்பாளோ
மன்னு மின்பத் தமிழ்மங்கை
மாழாத் துன்பக் கடல்மூழ்கி
இன்னு மீளா திருப்பதுன்றன்
இணையில் கருணைக் கிழுக்கன்றோ
முன்னைப் பெருமை மாத்தளை வாழ்
முத்து மாரி யம்பிகையே. 8.

நஞ்ச ரதர்கள் மத்தியுற்று
நடைப்பி ணங்க ளாகிவிட்டோம்
பஞ்ச ரதச்சீ ருள்ளாயப்
பாவி களையுந் திருத்தியெங்கள்
நெஞ்ச ரதத்தி லூர்ந்தருள்வாய்
நீடு மிடர்கள் பறந்தோடும்
மஞ்ச ரண்செய் மாத்தளைவாழ்
முத்து மாரி யம்பிகையே. 9.

புரக்கும் மாரி யெமையின்பிற்
பொருத்தும் மாரி வஞ்சகர்முன்
கரக்கும் மாரி யிடரையெல்லாங்
கலைக்கும் மாரி தண்ணருளே
சுரக்கும் மாரி யெம்முளத்திற்
சுடரும் மாரி மழைமுகில்கள்
மரக்குன் றூரும் மாத்தளைவாழ்
முத்து மாரி யம்பிகையே. 10.

**What profit have those derived from learning, who worship not the good feet of Him who is possessed of pure knowledge? 2.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை முத்துமாரி

மாத்தளை ராஜ்சிவா சிவலிங்கம்
முகாமையாளர், ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம்

இவ்வுலகில் மக்கள் மாக்களாக மாறாது மனிதர்களாக வாழ வழி வகுப்பது மத வழிபாடே யாகும். அதிலும் எமது சமயமாகிய சைவம், "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்று கூறுகின்றது. மனித நாகரிகம் தொடங்கிய போதே இறைவழிபாடு தொடங்கியது எனச் சைவ சமயம் கூறுகின்றது. நீரையும், நெருப்பையும், காற்றையும், சூரியனையும் வழிபட்ட மக்கள் காலப்போக்கில் தத்தம் இஷ்ட தெய்வங்களைக் கல்லிலும் மரத்திலும் திருவுருவங்களாக அமைத்து வழிபட்டனர்.

அவ்வாறு மனிதனின் ஆன்ம ஈடேற்றத்துக்காக அமைக்கப்பட்டவையே இன்று நாம் காணும் ஆலயங்கள் அனைத்துமாம். அப்படி அமைக்கப்பட்ட ஆலயங்களில் பல தெய்வங்களைப் பிரதிஷ்டை செய்து வணங்குகின்றனர். அவ்வாறு வழிபட்டு வரும் அடியவர்களுக்கு ஒருருவம், நாமம், குறியற்ற இறைவன், உயிர்கள் மீது கொண்ட தனிப் பெருங்கருணை காரணமாக ஆன்மாக்கள் மனத்தால் நினைத்தும், வாயால் திருவுருவைப் பாடியும், உடலால் வணங்கியும் உய்வடைவதற்குப் பலவகைத் திருமேனிகளைக் கொண்டு அருளுகின்றான்.

உயிர்களிடத்தில் நாதவடிவாயும் விந்து வடிவாயுமிருந்து, அருவத் திருமேனியாகவும் இருந்து அருளுகின்றான். அருவத்திருமேனி சிவம் சக்தி நாதம் விந்து என்பன. அருவம் என்றால் உருவமற்ற சோதிப்பிழம்பான ஒரே ஒளிமயம் எனப் பொருள்படும். இத்தகைய ஒளிமயமான சக்தியைக் கொண்டு அகில உலகங்களையும் காத்து அருளுபவள் அகிலாண்டகோடி பிரமாண்டநாயகி அன்னை பராசக்தி ஸ்ரீ முத்துமாரியம்பிகையாவாள்.

இந்த ஈழத் திருநாட்டிலே மாமன்னர்கள் ஆண்ட வரலாற்றுப் புகழ்பெற்ற கண்டி மாநகருக்குப் பக்கமாகப் பதினாறு மைல் தொலைவிலே அழகிய திருப்பதியாகிய "பன்னகாமமான மாத்தளை அழகுமலை அடிவாரத்திலே முத்துமாரி கோவில் கொண்டுள்ளார். இவள் ஈழத்து மதுரை மீனாட்சி எனும் பெயரோடு அருளாட்சி செய்கிறாள்.

இந்த அம்பிகையின் அழகான இராஜ கோபுரத்திற்கு எதிராக மேற்குப் பக்கமாக மிகக் கம்பீரமான தோற்றத்துடன் தேவஸ்தானத்தை மெருகூட்டியிருப்பது அழகு மலையாகும். இந்த அழகு மலை அடிவாரத்தைத் தென்னஞ் சோலைகளும் வயல்களும் அழகு செய்யும். மலை மேற்பகுதி அழகான வானைத் தொடும் அளவுக்கு அழகான நெடிய மரங்களைக் கொண்டுள்ளது. நடுப்பகுதியில் பனிபடர்ந்த முகில்கள் உறங்குகின்றன.

இந்த அழகு மலையைப் பார்த்துப் பரவசம் அடைய வேண்டுமானால் இரவு நேர நிலாவொளியே ஏற்றது. நிலவொளியில் பார்ப்போமேயானால் அந்த அழகு மலை ஓர் யானை வடிவமாக காட்சி தரும்.

இக்காட்சியை அம்பிகையின் சந்நிதானத்தில் இருந்தே பார்வையிட வேண்டும். இல்லையேல் காட்சி பரவசமூட்டாது. ஒளிய வேறு எங்கு இருந்து பார்த்தாலும் இவ்வழகிய காட்சியைக் காணமுடியாது. அம்பிகையை இராஜ கோபுரம் எப்படி அழகு படுத்துகின்றதோ அதேபோன்று, அழகுமலையும் ஆலயத்துக்கு மெருகூட்டுகிறது.

*வீட்டுக்கு வந்த ஒருவனுக்கு அவன் கேட்காமலே தாகசாந்திக்குத் தண்ணீர் கொடுப்பவனும், சோர்வுடன் வருபவர்களுக்கு ஓய்வு எடுக்கப் பாய் கொடுப்பவனுக்கும் தனக்குக் கஷ்டமிருந்தும் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் இனிமையாகப் பேசித் சமாளிப் பவனும் பெரிய பூஜை செய்த பலனை அடைகிறான்.*

மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார். 3.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய சிறப்புவாய்ந்த அம்பிகையின் ஆலயம் மலையத்தை மட்டுமல்ல உலகையே ஈத்துள்ளது. இவ்வம்பிகை ஆலயத்தின் வரலாறு சரியாகத் தெரியா விட்டாலும் இற்றைக்கு இருநூறு (200) வருடங்களுக்கு மேல் பழமைவாய்ந்தது என்றும் சான்றுகள் பகர்கின்றன.

மக்கள் இவ்வம்பிகைக்கு விழாக்களை அக்காலம் தொட்டுச் சிறிதாகவே செய்து வருகின்றனர். தற்போது பெருவிழாவாகச் செய்து வருகின்றனர். அம்மனுக்கு ஆண்டு தோறும் மாசி மாதத்தில் பெரும் திருவிழா எடுத்து மகநட்சத்திரத்தன்று தேர் இழுத்து மகிழ்வர்.

அன்னையின் அருளாட்சி மகத்துவத்தை அனைவரும் உணர்ந்து பயபக்தியோடு வணங்கி வருவர். அப்படி எல்லோரது மனத்தையும் கவர்ந்த அன்னை முத்துமாரிக்கு அழகிய சித்திர வேலைப்பாடமைந்த மிகவும் பெறுமதிமிக்க சித்திரத்தேர் அமைத்து பஞ்சரத பவனி நடாத்த சகல ஏற்பாடுகளையும் நிர்வாக சபையினர் ஏற்படுத்தி யுள்ளதையிட்டு நாம் அனைவரும் மகிழ்ச்சி அடைகிறோம்.

அன்னை முத்துமாரி இவ்வழகிய சித்திரத் தேரில் பவனிவர வேண்டும் என்பது அடியார்களின் பல நாளைய எண்ணம். இவ்வடியார்களின் எண்ணத்தை நிவிர்த்தி செய்ய இவ்வாலய நிர்வாக சபை பாடு படுகின்றது. ஒத்துழைப்புடனும் அடியார்கள் உதவி செய்கின்றனர். இரவு பகல் என்றும் பாராது இவ்வாலய அறங்காவலரும் பாடுபடுகின்றார். அகில இலங்கைச் சமாதான நீதவானுமாகிய "சிவநெறிச் செம்மல்" திரு. த. மாரிமுத்து செட்டியார் அவர்களின் விடாமுயற்சியால் இவ்வழகிய சித்திரத் தேரை அன்னைக்கு உருவாக்கியுள்ளார்.

பத்து வருடங்களுக்கு முன் பஞ்சரத பவனி நடைபெற்றது போன்று இம்முறையும் வெகு விமரிசையாகப் பஞ்சரத பவனி நடைபெற அம்பிகையின் அருள் கிட்டியுள்ளது.

இத்தினத்திலே அன்னையைத் தரிசித்து சித்திதரும் அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகியாகிய அம்பிகையின் திருவடியை வணங்கி நாமும் கவலையின்றி வாழ்வோமாக.

## செயல் முடிவில் பயன் பாராட்டாதவர்

பிள்ளைதான் வயதில் மூத்தால்
பிதாவின் சொற்புத்தி கேளான்;
கள்ளின்நல் குழலாள் மூத்தால்
கணவனைக் கருதிப் பாராள்;
தெள்அற வித்தை கற்றால்
சீடனும் குருவைத் தேடான்;
உள்ளநோய் பிணிகள் தீர்ந்தால்
உலகர் பண்டிதரைத் தேடார்.

*மைந்தன் வயது முதிர்ந்தால் தன் தந்தையின் சொல் புத்தியைக் கேட்கமாட்டான். தேன் பொருந்திய நல்ல கூந்தலையுடைய மனைவியும் வயதால் மூத்தால் அல்லது தன் கணவன் கிழப் பருவம் அடைந்தால் மதிப்புடன் எண்ணி அவனுக்குப் பணிவிடை செய்ய மாட்டாள். குற்றமறத் தெளிவாகக் கல்வியைக் கற்று விட்டால் மாணவனும் தன் ஆசிரியனைத் தேட மாட்டான். இந்த உலகத்தவர் தமக்குள்ள நோய்கள் தீர்ந்ததாயின் மருத்துவரைத் தேடமாட்டார்.*

- விவேக சிந்தாமணி

**They who are united to the glorious feet of Him who passes swiftly over the flower of the mind, shall flourish long above all words. 3.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி வளர்ச்சியில் எமது ஆலயம்

செ. இராஜகுலேந்திரன்
அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானக் கல்வி இலாகாப் பொறுப்பாளர்

இலங்கையில் சைவ நெறி சிறந்து விளங்குகின்றது. இந்த உயர் நிலையின் பின்னணியாகச் செழுமையானதொரு பாரம்பரியம் ஒளிர்கின்றது. தொன்மையும் தனித்துவமும் கொண்ட இந்த மரபு உலகிலே முக்கிய இடம் பெறுகின்றது. அத்தோடு ஒரு சமுதாயம் உயர்ந்த நிலையில் இருந்தால் தான் அந்நாடே உயர்ந்த நிலையை அடையும். ஒரு நாட்டின் கல்வி வளர்ச்சியிலேயே அந்நாட்டின் உயர் நிலையும் தங்கியுள்ளது என்பது வெள்ளிடை மலை. சைவர்களாகிய எம்மைப் பொறுத்தமட்டில் எமது சைவ நெறியும் கல்வி அறிவுமே எமக்குக் கலங்கரை விளக்கமாக அமைந்துள்ளது. இவ் விரண்டுக்கும் அமையச் செயலபட்டு உன்னத ஸ்தானத்தில் சிறந்து விளங்குவது பன்னகாமம் என்று அழைக்கப்படும் மாத்தளை மாநகரில் எழுந்தருளி இருக்கும் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம் ஆகும்.

கல்வி வளர்ச்சியில் எமது ஆலயப் பங்களிப்பை எடுத்து இயம்புவது அம்பிகை விழாக்கோலம் பூண்டிருக்கும் நேரத்தில் சாலச் சிறந்தது. ஆலய அறங்காவலர் சபையினர் கல்வி வளர்ச்சியின் முதற் படியாக ஒரு கல்வி இலாகாவை ஏற்படுத்தி அதன் தலைமையில் இயங்குகின்றது.

கடந்த நாற்பது வருடங்களாகத் தேவஸ்தான வளவினுள் அறநெறிப் பாடசாலை வகுப்புகள் ஆன்மீக ரீதியில் நடாத்தப்பட்டு வருகின்றன. இன்றைய கல்வித் திட்டத்துக்கு அமைய சமயக்கல்வி போதிக்கப்பட்டு வருவதோடு, சமயப் போட்டிகள், கருத்தரங்குகள் பஞ்சபுராணம் ஓதுதல் ஆகியன சமயத்துக்கு என்றே புறம்பாகப் பயிற்றப்பட்ட ஆசிரியர்களால் நடாத்தப்பட்டு வருகின்றன.

கல்விப் பணியில் இங்கு மிகக் குறிப்பாகவும் பொறுமையாகவும் எடுத்துக் கூறக்கூடியது மழலைச் செல்வங்களின் ஆரம்பப் பாடசாலை. கடந்த ஐந்து வருடங்களாகப் பலராலும் போற்றப்படும் வண்ணம் இப்பணி இலவசமாக நடாத்தப்பட்டு வருகின்றது. திறமை மிக்க தகைமை பெற்ற ஆசிரியைகளினால் நடாத்தப்படும் இப்பாடசாலையின் ஆண்டு இறுதிப் பரிசளிப்பு விழாவில் இடம்பெறும் மழலைச் செல்வங்களின் திறமையை வெளிப்படுத்தும் இயல், இசை, நாடக நிகழ்ச்சிகள் ஆலயத்தின் உன்னதப் பணிக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும்.

இன்றைய இலங்கைக் கல்வித்திட்டத்தின் கீழ் இளம் மாணவ மாணவியரின் ஆரம்பக் கல்வித்தகைமைப் போட்டிப் பரீட்சை; ஆண்டு ஐந்திலே நடாத்தப்படும் புலமைப் பரிசில் போட்டியாகும். இதற்குத் தயாராகும். குறிப்பாக வசதியற்ற பெற்றோர்களின் குழந்தைகளுக்காக வாரத்தின் மூன்று நாட்கள் இலவசமாக நடாத்தப்படும் பயிற்சி வகுப்புகளும் ஆலயக் கல்வி வளர்ச்சிப்பணிக்கு ஒரு சிறந்த சாட்சி.

மேலும் கல்விப் பொதுத் தராதரப் (உயர்தர) பரீட்சைக்குத் தோற்றிப் பெறுபேறுகளை எதிர்பார்த்து இருக்கும் மாணவ மாணவியருக்காவும், கல்விப்பொதுத்தராதர (சா / த) பரீட்சைக்குப்பின் கல்வியைத் தொடராத மாணவ மாணவியருக்காகவும் தட்டெழுத்து, சுருக்கெழுத்து வகுப்புகளும் இலசவமாக நடாத்தப்பட்டு வருவது தேவஸ்தானக் கல்விப் பணியில் குறிப்பிடத்தக்கது. மேலும் பயிற்சி, காலவரையறையின் பின் இவர்களுக்குப் போட்டிப் பரீட்சை நடாத்தப்பட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. இது அவர்களின் உத்தியோக ரீதியான முயற்சிகளுக்கு நிச்சயம் துணைபுரியும்.

கல்வி வளர்ச்சிப் பணியில் பல வழிகளிலும் பணிபுரியும் எமது ஆலயம் தமது கல்வி நிதியத்தின் மூலமாக வசதியற்ற ஏழைக் குழந்தைகளுக்கு நிதி உதவிகள் செய்வதோடு அவர்களுக்குத் தேவையான அப்பியாச புத்தகங்களையும் ஏனைய உபகரணங்களையும் வழங்குவது ஆலய கல்வி வளர்ச்சிப்பணிக்கு மெருகேற்றுகின்றது. இந்த வளர்ச்சிப் பணிகள் தொடர்ந்து இயங்க எல்லாம் வல்ல அம்பிகையின் அருளை நாடுவோமாக. உலகத்து நாயகியான எமது மாத்தளை முத்து மாரியைப் பிரார்த்திப்போமாக.

வேண்டுதல்வேண் டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில. 4.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புஷ்ப விசேடம்

-சிவஸ்ரீ ச. குமாரசாமிக் குருக்கள் -

கோங்கம்பூவில் சரசுவதியும், அலரிப்பூவில் பிரமாவும், வன்னியில் அக்கினியும், நந்தியாவர்த்தத்தில் நந்தியும், புன்னையில் வாயுவும், எருக்கில் சூரியனும், சண்பகப்பூவில் சுப்பிரமணியரும், வில்வத்தில் இலக்குமியும், கொக்கிறகம்பூவில் விட்டுணுவும், மாவிலிங்கையில் வருணனும், மகிழில் சரசுவதியும், வாகையில் நிருதியும், சாதிப்பூவில் ஈசானனும் செங்கழுநீரில் சூரியனும், குமுதம்பூவில் சந்திரனும், மந்தாரையில் இந்திரனும், மதுமத்தையில் குபேரனும், நாயுருவியில் இயமனும், தாமரைப்பூவில் சிவனும், அறுகில் விநாயகரும், நீலோற்பலத்திலும் ஏனைய வாசனைப் புஷ்பங்களிலும் உமாதேவியாரும், அதிதேவதைகளாய் இருப்பார்கள்.

ஆகையால், இப்பத்திர புஷ்பங்களையும் ஏனையவற்றையும் விதிப்படி எடுத்துக் கொடுப்பவர்களும், அவற்றினாற் பூசித்தவர்களும், திருமாலை கட்டிக் கொடுப்பவர்களும் திருநந்தன வனம் வைப்பவர்களும் போகமோக்ஷங்களை அடைவார்ளென்று உண்மை நூல்கள் கூறுகின்றன.

### சாத்துவிக புஷ்பங்கள்

வெண்ணிறப் புஷ்பங்கள் சாத்துவிக குணமுடையன. அவைகள்:- வெள்ளெருக்கு, வெள்ளலரி, பிச்சி, கொக்கிறகு மந்தாரை, புன்னை நந்தியாவர்த்தம், மல்லிகை, முல்லை முதலியனவாம். இப்புஷ்பங்களால் சாத்துவிக காலங்களாகிய உஷக் காலம் சாயரட்சை அர்த்தயாமம் என்னுங் காலங்களில் அருச்சிப்பவர்கள் மோக்ஷத்தை அடைவார்கள்.

### இராசத புஷ்பம்

செந்நிறப் புஷ்பங்கள் இராசத குணமுடையன. அவை பாதிரி செந்தாமரை, செங்கழுநீர், செவ்வலரி, செங்கடம்பு முதலியனவாம். இப்புஷ்பங்களால் இராசத காலமாகிய மத்தியானத்தில் அருச்சிப்பவர்கள் போகத்தை அடைவார்கள்.

### இராசத சாத்துவிக புஷ்பங்கள்

பொன்னிறமுள்ள கொன்றை, சண்பகம், பொன்னூமத்தை செருந்தி, பொன்னொச்சி முதலியவைகளாம். இப்புஷ்பங்களால் இராசத சாத்துவிக காலமாகிய பிராதக் காலத்தில் அருச்சிப்பவர்கள் போகமோக்ஷங்களை அடைவார்கள்.

### இராசத தாமத பத்திரங்கள்

வில்வம், துளசி, மருக்கொழுந்து, அறுகு. மாசிப்பச்சை, திருநீற்றுப்பச்சை முதலியவைகளாம்.

வாசநலஞ்செய்திமையோர் நாடோறுமலர் தூவ
வீசனெம்பெருமானா ரினிதாகவுறையுமிடம்
யோசனை போய்ப்பூக் கொணர்ந்தங்கொருநாளு மொழியாமே
பூசனைசெய்தினி திருந்தான் புள்ளிருக்குவேளூரே

நொச்சியேவன்னி கொன்றைமதி கூவிளம்
உச்சியேபுனைதல்வேடம் விடையூர்தியான்
கச்சியேகம்பமேவிய கறைக்கண்டனை
நச்சியேதொழுமினும் மேல்வினைநையுமே.

- திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

## விளக்கேற்றி விட்டால் விலக்க வேண்டியவை

அந்திப் பொழுது கிடவார் நடவாரே
உண்ணார் வெகுளார் விளக்கிகழார் முன்அந்தி
அல்குண்டு அடங்கல் வழி.

மாலைப்பொழுது கழிந்து, இரவு தொடங்குவதற்கு முன்னுள்ளதான, அந்தி நேரத்தில், படுத்து உறங்கக் கூடாது. தொலை தூரம் நடக்கக் கூடாது. அந்தி நேரத்தில், உண்ணக் கூடாது, பிறர் மீது கோபம் கொண்டு பேசக் கூடாது. அந்தி விளக்கு ஏற்றுதல் தவறக் கூடாது. அந்தி இரவில் வெளிச் செல்லாமல் வீட்டில் இருப்பதே நல்லது

- நன்றி ஆசாரக்கோவை -

To those who are united to the feet of Him who is without desire or aversion, evil shall never come. 4.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தாந்த நூல்கள் தெளிவு செய்திறம்

- இயற்றமிழ் வித்தகர் பண்டிதர் ச. சுப்பிரமணியம் -

சித்தாந்த சாத்திரம் பதினான்கு. தலைமை பெறும் நூல் சிவஞானபோதம். சாத்திரங்களில் உமாபதி சிவாசாரியர் அருளியவை அட்டகம் எனப்படும் எட்டு நூல்கள். அவற்றின் முழுமை பெற்ற நூல் சிவப்பிரகாசம். சிறந்து விளங்கும் மற்றொரு சிறுநூல் திருவருட்பயன். பத்து அதிகாரங்கள்; பத்துப் பத்துக் குறட்பாக்கள் கொண்டது. சித்தாந்த சாத்திரங்களின் பொழிப்புரை போலுள்ளது.

இந்நூலிலே பதியியல்பு, பசுக்களின் இயல்பு, பாசங்களினியல்பு, பசுவானது பதி அருளினாலே பாசம் நீங்கிப் பதியை அடையுமாறு, ஞானகுருவின் உபகாரம், சீவன் முத்தர் பரமுத்தர் தன்மை என்பன சுருங்கக் கூறி விளங்க வைக்கப்படுதலைக் காணலாம். எல்லாக் கருத்துகளும் மெய்கண்ட சாத்திரம் எல்லாவற்றுக்கும் ஒப்ப முடிந்தவையே.

இந்நூல் சைவ சமயப் பரீட்சைக்குரிய பாடப்புத்தகங்களிலே இடம்பெறும் ஒரு பகுதியாய் உள்ளது. அதில் அருளுருநிலை என்னும் அதிகாரம் சிவனருள்தானே குருவடிவாய் வந்து உபகாரம் செய்கிறது என்பதையும் ஞானகுருவின் இன்றிய மையாமையையும், அவர் தீட்சையினாலேயே சீடனுக்கு மலநீக்கமும் ஞானோதயமும் முடிவில் மோட்சமும் உண்டென்பதையும் நன்கு தெளிவுற ஏற்ற உவமைகளால் உணர்விக்கிறார் ஆசிரியர்.

முதலிலே குருவின் இன்றியமையாமை எவன் எந்தத் துறையிலே ஐயந்திரிபில்லாத தெளிந்த அறிவுடையவனோ, அவனிடமே சீடனாக நாம் சேர்ந்து அத்துறையிலே தெளிந்த அறிவுதேட வேண்டியிருப்பதை எவரும் அறிவர்; அதுபோலவே மெய்ஞ்ஞான நூற்பொருளையும் ஞானகுருவைச் சார்ந்து தான் பெறலாம். நாமாகவோ வேறுபிறரிடமோ ஞானம் பெறலரிது. ஆதலால் நூலுக்கு ஆசிரியனும் ஞானத்திற்குக் குருவும் இன்றியமையாதவராவர்.

மலநீக்கம் பெறுவதற்குக் கண்கூடான எடுத்துக் காட்டு: விடம் தீண்டிய ஒருவனுக்கு விடம் தீர்க்க வேண்டும்; அது விடகாரி எனப்படும் மாந்திரீகனின் சிகிச்சைகளாலே தீர்வதன்றித் தீராது. வேறு எந்தப் பரிகாரங்களும் பயன்தரா.

விடந்தீர்ப்பவர் தமது முன்னோர் உதவிய மந்திர தந்திர வழியில் நகுலம் – கீரி, கருடன் என்றிவற்றில் ஒன்றின் அதிதேவதையை ஆராதித்து அதன் சக்தியைத் தமக்குச் சாதகமாக்கி அச்சத்தியின் துணையால், பார்வை முதலிய பரிகாரங்களாலே விடந்தீர்ப்பர்; விடமேறியவன் விடம் இறங்கச் சுகமாவான்.

அது போலவே மலபந்தமுற்றிருக்கும் சீவருள்ளே பக்குவமுற்றவரைக் குரு எதிர்ப்பட்டுத் தமது தீட்சைக் கிரியை உபதேசம் என்பவற்றாலே மலபந்தம் நீங்கச் செய்து சீவன் முத்தராக்கி இன்புற்றிருக்கச் செய்வர்.

நமக்குப் புலனாகும் எவ்வகை உயிரும் பஞ்சபூதகாரியமாகிய உடம்பைப் பெற்றவை; நம் போன்றவை; அவற்றாலே ஆவதொன்றில்லை; அவற்றுக்குத் தனித்தனி அதிவேவதையான மூலம், ஆதிதெய்வமென இறைவன் படைப்பில் உண்டு. அத்தெய்வத்துக்கே சக்தி உண்டு. நாம் காணும் பௌதிக வடிவான கருடனோ கீரியோ கண்காண முன்வரினும் விடம் இறங்குவதில்லை; ஆனால் தன்னை அவையாகப் பாவனை செய்து கொண்டு

*சுண்ணாம்பு தடவிய வெற்றிலை, பாக்கு இவற்றை உட்கொள்ளாமல் வெறும் வெற்றிலையையோ அல்லது வெறும் பாக்கையோ போடக் கூடாது. வெற்றிலையின் பின்பக்கம் சுண்ணாம்பு தடவ வேண்டும். தவிர முன்புறம் தடவக் கூடாது.*

★★★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலமான தெய்வசக்தி கைவந்த மாந்திரிகன் சிகிச்சையாலே தான் விடந்தீர்கிறது. இது கண்கண்ட அநுபவம்.

இவ்வாறே குருமூலம் பெற்ற உபதேசவகையாலே தியானம் செபம் பூசனை செய்து சிவனருள் கைவரப் பெற்றுள்ள ஞானகுருவும், ஒரு நாள் பக்குவம் பெற்ற சீடனை எதிர்ப்படுவர்; இறையருள் ஏவச் சீடனுக்குத் தீட்சையளித்து ஞானோபதேசமும் செய்வார்; அவனும் பாசபந்தம் – விடம் போல – அகலவே தூயவனாகி மெய்யுணர்வு – சுகம் பெறுவான்.

மெய்யுணர்வு ஞானம் பெறலும் இவ்வாறு காட்டப் பெறுகிறது:

வானசோதியாக நின்றவாறே சூரியன் பல்லக விளக்காக ஒளிபரப்பும்; வெப்பமும் தரும்; ஆயினும் பஞ்சிலே தன் கிரணங்களை நேராகச் செலுத்தித் தீயைப்பற்றவைப்பதில்லை; சூரிய காந்தக் கல்லெனும் ஊடகத்தின் மூலம் ஒளியைப் பாய்ச்சியே தீப்பற்றச் செய்கிறது; இது கண் கண்டகருமம்.

சிவபிரானும் சர்வவியாபகமாய் விளங்கி அனைத்தையும் இயற்றி நிற்கினும், சகலரான ஆன்மாக்களிலே பக்குவர்களுக்கு மாத்திரம் குருவை அதிட்டித்து நின்று அவர்மூலம் (சூரிய காந்தம் போல) திருவருளைச் செலுத்தி, தீட்சை முறையாலே பாசம் அகற்றி மெய்யுணர்வு உதிக்கச் செய்து ஞானியராக்குவார்; அன்றி நேராகவே அக்காரியத்தை நிகழ்த்துவதில்லை,

இவ்வுண்மை திருமந்திரத்திலும் பேசப் படுகிறது.

சூரிய காந்தமும் சூழ்பஞ்சும் போலவே
சூரிய காந்தம் சூழ்பஞ்சைச் சுட்டிடா
சூரியன் சந்நிதி யிற் சுடு மாறுபோல்
சூரியன் தோற்ற அற்ற மலங்களே.

சூரியன், சூரிய காந்தம், பஞ்சு இவை இதே கிரமத்திலே நேர்பட்டு இருக்கும் போதே; சூரிய ஒளி காந்தத்தினூடு பஞ்சிலே பாய்ந்து தீப்பற்றுவிக்கும்; அப்போது பஞ்சுரு அழிகிறது தீப்பிழம்புபோலவே மெய்யுணர்வு – ஞானஒளி தோன்றி அதுவே எஞ்சி நிற்பதும் ஒருங்கே காட்டப்படுகிறது.

இறையருள் சூரியஒளி, ஞானகுரு சூரியகாந்தம், பக்குவான்மா பஞ்சு ஆகிய மூன்றும் நேர்படும் நேரம் ஒன்றிலேதான் இருகருமமும் ஆகும்.

எண்ணெய், நெய் இவற்றால் செய்த பதார்த்தங்களையும், பழ வர்க்கங்களையும் தவிர மற்ற உணவுப் பொருள்களைக் கையால் பரிமாறக் கூடாது. இரும்பு மற்றும் தாமிரத்தால் செய்த கரண்டிகளை எந்தச் சமயத்திலும் பரிமாறப் பயன்படுத்தக் கூடாது

★★★★★

எமது சைவ சித்தாந்தக் கோட்பாடு சற்காரியவாதம் எனப்படுவது; உள்ளதே தோன்றும், இல்லாதது தோன்றாது என்பது அதன் பொருள்.

பஞ்சிலும் விறகிலும் தீ உள்ளது. அது சூரியனிலுள்ள வெப்பத்தால் தீண்டப்பட்டு தீ உருவமாய் வெளிவரும்; பாலிலுள்ள வெண்ணெய் கடைய வெளிவருமாறு போல்.

ஆன்மாக்களிடம் சிற்றறிவு உள்ளது; அது கல்வி கேள்விகளால் வளர்ச்சி பெறும். ஆயினும் ஞானகுரு தீட்சை உபதேசம் பெறும் போதே மெய்யறிவாக மெய்ஞ்ஞானமாக விளக்கமுறும்.

எல்லாப் பொருளுக்கும் நிற்றபேதம் உண்டு. ஆனால் சூரிய ஒளிபெறும் போது அதிலிருந்து தமக்குரிய நிறத்தை – ஒளியை – வாங்கிப் பிரகாசிக்கிறது. அதுபோலவே கண்ணிலும் தீயின் அம்சமான ஒளி உள்ளதே எனினும், விளக்கு சூரியன் என்னும் ஒளியின் உபகாரத்தின் மூலமே பொருள்களைக் கண்டுணரும். அதுபோலவே பேரொளியாகிய சிவனருளின் தூண்டுதல் பெற்ற குருவின் உபகாரத்தாலே தான் பக்குவான்மா மெய்யுணர்வு பெற்றுப் பிரகாசிக்கும்.

இக்கருத்தை வெளிப்படுத்தும் திருவருட் பயன்குறளை நோக்குவோம்;

1. விட நீக்கம் / மலநீக்கம் { விடம் நகுலம் மேவினும் மெய்ப்
பாவகனின் மீளும்
கடனில் இருள் போவது இவன்
கண் (7ம் குறள்)

2. ஞானோதயம் / அனலுதயம் { ஞானம் இவனொழிய நண்ணி
யிடும் நற்கல் அனல்
பானு ஒழியப்படின். (10ம் குறள்)

The two-fold deeds that spring from darkness shall not adhere to those who delight in the true praise of God. 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்:

1. விடம் நகுலம் மேவினும் (மீளா) ஒருவரைப் பற்றிய விடமானது கீரியானது முன்வந்து பார்த்தாலும் விட்டுவிலகுவதில்லை, ஆயினும் மெய்ப் பாவகனின் மீளும் – மெய்யாகவே தன்னைக் கீரியாகப் பாவனை – தியானம் செய்து கொண்ட மாந்திரீகனின் பார்வை சிகிச்சைகளாலே தான் விடம் இறங்கிவிடுகிறது; கடனில் – இம்முறையே, இருள்போவது இவன்கண் – ஆன்மாவைப் பற்றியுள்ள இருளெனும் ஆணவமும் அதனாலாகும் வினையும் பயனும் கழன்று நீங்குவது ஞானகுருவின் தீட்சையினாலேதான் ஆவதாகும்.

இதனாற் பெறப்படுவது: தெய்விக நகுலத்தின் சத்திதானே மாந்திரீகனூடாகப் பாய்ந்து விடந்தீர்த்து நோய் நீக்கிச் சுகந்தருகிறது; அதுபோல் சிவனளும் குருவினூடாகச் சென்று ஆன்மாவிற் பதிந்து மலபந்தம் அகற்றிப் பிறவித்துன்பமகற்றி நித்திய சுகம் தருகிறது என்பதாகும்.

2. இங்குறளிலே அதிகாரமுறையும், உவமை உவமேயம் என்பவற்றின் பொருத்தமும், உவமை அணியிலுள்ள உறுப்புகளின் இணக்கப்பாடும், முன்னைய குறளுடன் உள்ள இயைபும் நோக்கிச் சொற்களைக் கொண்டு கூட்டிப் பொருள் கொள்ளல் தரும். வருமாறு:

பானு நற்கல் ஒழிய அனல்படின் – சூரிய ஒளியானது நல்ல சூரிய காந்தக்கல் ஊடாகப் பாய்ந்து தீண்டுதலொழிந்து தானே நேரே பஞ்சிலே தீண்டித் தீயைப் பற்ற வைக்குமாயின், அது நிகழ்வதில்லை. இவ்வாறே, ஞானம் இவனொழிய நண்ணியிடும் – மெய்ஞ்ஞானமாகிய தீயும் குருவாகிய இவனூடாகச் செலுத்துதலில்லாமல் நேராகவே சிவனது திருவருள் சீடனிடம் சேர்ந்து உண்டாக்கும் எனலாம். நிகழ்வதில்லையே என்றதால் பெறப்படுவது: சூரியகாந்தத்தினூடாகப் பாய்ந்தே சூரியஒளி பஞ்சை அடைந்து தீயை உண்டாக்கும்; அதுபோலவே சிவனது திருவருளும் குருவினூடாகச் சென்றே சீடனை அடைந்து மெய்ஞ்ஞானம் உண்டாக்கும் என்பது.

இருஉவமான உவமேய உறுப்புக்ளின் இயைபு நோக்குதல்.

| | | | |
|---|---|---|---|
| நகுலம் | சிவன் | சிவன் | சூரியன் (பானு) |
| அதன்சக்தி | அருள் | திருவருள் | சத்திஒளிவெப்பம் |
| மாந்திரிகன் | குரு | ஞானகுரு | சூரியகாந்தம் |
| பாவனை சிகிச்சை | தீட்சை | தீட்சை | நேர்படும்தொடர்பு |
| விடம்பற்றியவன் | சீடன் | சீடன் | பஞ்சு |

| | | |
|---|---|---|
| விடம்தீர்தல் | மலநீக்கம் பாசநீக்கம் | தீதோன்றிப் பஞ்செரிதல் |
| சுகமடைதல் பயன் | சுகமுறல் ஞானமுதித்தல் ஞானியேயாதல் | பஞ்சே தீப்பிழம்பாதல் பஞ்சழிந்து தீயே எஞ்சும் |

| | |
|---|---|
| தீபற்றமுதற் காரணம் சூரிய ஒளிவெப்பம் | ஞானத்திற்கு சிவனும் திருவருளும் |
| உதிக்கத்துணை நிற்பது காந்தம் | ஞானம் உதிக்க உதவுபவர் குரு |
| தீ பிறந்து பஞ்சொழிவது | ஞானம் பிறந்து பாசம் ஒழிவது |
| தான் அழிந்து தீயே எஞ்சுவது | தான் அழிந்து ஞானமாவது சீடன். |

இவ்வாறன்றிச் சூரியன் இல்லாமலே சூரியகாந்தக் கல்லிலே தீ பற்றுமாயின் எனக் குறள் கிடந்தபடி பொருள் கொள்வது உவமையின் இயல்புக்கு இணங்கவில்லை. அன்றியும் அதிகாரம் குருவின் முதன்மை இன்றியமையாமைக்கு ஏற்கவில்லை. என்றுமே பஞ்சிலன்றிச் சூரிய காந்தத்தில் தீபற்றுவதில்லை இவை நினைய வேண்டியவை.

திருவருட்பயன் குறள் வைப்புமுறையிலும் 7ம் குறளை அடுத்துப் பத்தாம் குறளே 8ம் குறளாயிருக்க வேண்டும் 7ம் 10ம் குள்கள்கள் முன்னுள ஆறுகுறளுடன் தொடர்ந்து சகலருக்கு அருள்புரிவதையே தொடர்ந்து கூறுவன. 8ம் 9ம் குறள்கள் 9ம் 10ம் குறள்களாகிய மற்றைய சீவர்க்கும் அருளுமாறு கூறுவதால் இறுதியில் அமைதல் முறையாகும்.

*ஈரத்துணியுடனும், துண்டுடனும், சாப்பிடுவது கூடாது. தெருக் கதவைச் சாத்தாமலும், சந்திரனின் நிழலிலும், கொள்ளிக்கட்டையின் வெளிச்சத்திலும், நடு நிசியிலும்; பிரதோஷ காலத்திலும், மொட்டை மாடியிலும் சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும், ஆனால் பௌர்ணமியன்று நிலாச் சாப்பாடு தனியாகச் சாப்பிடாமல் பலருடன் சாப்பிட வேண்டும்.*

★★★★★

பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார். 6.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதுரையின் மிகப் பெரிய மேன்மை

- முருகவே பரமநாதன் -

சமுதாயத்தின் கோணல்களை, சரிவை நீக்கி நேரியபாதையில் செந் நெறிப்படுத்துவன நீதி நூற்களும், அவை சார்ந்த இதிகாசங்களும், சமயப் பெருநூற்களுமாகும். இவ்வரிசையிலே ஔவையார் முதன்மை இடம் வகிக்கிறார். இத் தொடரில் உலகநாதன், அதிவீரராம பாண்டியன், சிவப்பிரகாச சுவாமிகள், குமரகுருபரர் மேலாந்தரம் உடைய நீதிநூற்களைச் சமுதாயத்துக்கு அளித்துள்ளனர். ஔவையார் காலத்துக்குக் காலம் வேறுவேறாக வாழ்ந்தனர் என்பர். எனினும் நீதி நூல்தந்த ஔவை பிரத்யாதி ஆனவர். அவர்களின் நூல்களுள் ஒன்று, வாக்குண்டாம். இதன் காப்புச் செய்யுளே "வாக்குண்டாம், நல்ல மனம் உண்டாம் என அமைந்துளது. இதற்கு மூதுரை என்றும் பெயர். இவ்வார்த்தை திருப்புகழ் ஒன்றிலே பயின்று வரக்காணலாம். இப்பிரயோகம் (மூதுரை என்பது அருணகிரிப் பெருமான் வாக்கில் திருமுருகாற்றுப்படை என்னும் சங்கநூலைக் குறிக்கிறது. இதைப் பாடியருளியவர் நக்கீரர் என்னும் முதன்மைப்புலவர். இத்திருப்புகழ் வருமாறு:-

"வதன சரோருக நயன சிலீமுக வள்ளி புனத்தில் நின்று
வாராய்பதி காதங் காதரை யொன்றுமூரும்
வயலுமொரேவிடை யெனவொரு காவிடை வல்லப மற்றழிந்து
மாலாய் மட லேறுங் காமுக எம்பிரானே
இதவிய காணிவை தநையென வேடுவ னெய்திடு மெச்சில் தின்று
லீலாசல மாடுந் தூயவன் மைந்தநாளும்
இளையவ மூதுரை மலைகிழ வோனென வெள்ள மெனக்கலந்து
நூறாயிர பேதஞ் சாதமொ ழிந்தவாதான்
கதைகன சாபதி கிரிவளை வாளொடு கைவசி வித்தநந்த
கோபாலம கீபன் தேவிம மகிழ்ந்து வாழக்
கயிறொ டுலூகல முருள வுலாவிய கள்வ னறப்பயந்து
ஆகாயக பாலம் பீறநி மிர்ந்துநீள
விதரண மாவலி வெருவ மகாவ்ருத வெள்ள வெளுக்கநின்ற
நாராயண மாமன் சேயமு னிந்த கோவே
வளைய லூரடிடை வளைவிளை யாடிய வெள்ளிநகர்க் கமர்ந்த
வேலாயுத மேவுந் தேவர்கள் தம்பிரானே
திருப்புகழ் 688

இப்பாடலிலே அமைந்த மூதுரை திருமுருகாற்றுப் படையைக் குறிக்கின்றது. இந்நூல் பத்துப் பாட்டுத் தொகையில் முருகு, பொருநாறு என முதல் இடம் வகிக்கிறது. பதினோராம் திருமுறையில் இடம் பெறும் இப்பனுவல் சங்க இலக்கிய வரிசையில் மேற்கணக்கு நூல்களுள் ஒன்று. உலகம் உவப்ப என ஆரம்பித்து. பழமுதிர் சோலேமலை கிழவோனே என நிறைவு பெறுகிறது 317 அடிகளாலியன்றது. இதைவிட 10 தனிப்பாடல்கள் வெண்பாயாப்பில் அமைந்துள்ளன. முருக பக்தர்கள், முருகச் சிந்தையர் இதை நித்திய பாராயணஞ் செய்வர். வீடு பெற்றான் ஒருவன் வீடு பெறவிரும்பிய ஒரு பக்தரை முருகனிடத்து ஆற்றுப் (வழிப்) படுத்துமுகமாகப் பாடலின் போக்கு அமைந்துளது. மலைகிழவோன் எனமுருகன் பேசப்படுகிறான். கைலைமலைக்குரியோனாய்ச் சிவன் பேசப்படுவதும் வழக்காறாகும். இத்திருப்புகழிலே திருமுருகாற்றுப்படை விழுமியமிக்க பாவியமாகக் கணிக்கப்பட்டுள்ளது எனவே இப்பனுவல் தொன்மை சேர் பழைமையான, இறுக்கமுள்ள பக்தி இலக்கிய மாதலின் மூதுரை எனப் பேசப்பட்டது என மூதறிஞர் பேசுவர். இக்குறிப்பை பாவுள் "முன்னுறவந்து நிற்கும் முருகாற்றுப்படை" என வழி மொழிகிறார் சிவப்பிரகாச சுவாமிகள். பெரும் பெயர் முருகனின் படைவீடு ஆறும், இடம் பெற, ஓராறு முகமும், ஈராறுகரமும் அமைந்துள பொருள்மையும், செவ்வியமாய்ப் பாடப்பட்டுளமை குறிப்பிடத்தக்கது. ஆக அருணகிரியாரின் கருது கோள் என்ன எனப் பார்ப்போம். முருக நாமம், சிவநாமம், விஷ்ணு நாமம், இராம நாமம், சக்தி நாமம் மந்திரமாக அமைந்தவை, இவற்றைக் கூறிக் கூறிப் பேசிப் பேசிச் சொல்லிச் சொல்லி மேன்மையுறுவர் சமயிகள். இந்நெறியிலே முருகா, குகா, குமரா, சரவணபவா என்பன உசிதமான நாம ஒலிகள் இவற்றைப்பற்றித் தான் பண்ணிய பனுவல்களிலே அழுத்தமாகப் பேசிய போதும், இப்புகழிலே ஒரு தனித்துவத்தைப் பேணுகின்றார். அது என்ன?

"மூதுரையாம் திருமுருகாற்றுப் படையில் அமைந்துள்ள 'மலைகிழவோனே'
என நா நிறைய வாய் நிறையச் சொன்னால் எண்பத்து நான்கு நூறாயிரவகை
யான பிறப்புகளும் ஒழியும். எனவே இறவாத, பிறவாத முருகபதமாம் பெரும்
பேறு எய்தலாம். இக் கருத்துரை ஒரு க்ஷேத்திர மகிமையை மனமொழி
மெய்களால் உணர்ந்தால் சிந்தித்தால் உணர்வரிய அறுமுகவனின் தனிச் சரணாம்
சரணங்களை அடையலாம். இம்மாபெரும் மேன்மையை
.........நாளும்

Those shall long prosper who abide in the faultless way of Him who has destroyed the five desires of the senses. 6.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளையவ மூதுரை மலை கிழவோனென - வெள்ளமெனக் கலந்து நூறாயிர பேதஞ் சாத மொழிந்தவாதான்'' என்னும் அடிகளில் சுட்டிக்காட்டியுள்ளார். என்றும் இளையாய், அழகியாய் எனப் பிறிதோர் இடத்தும் அமைத்துக் கவிசெய்துளார் நக்கீரர் இந்த மகாமந்திரம் வெள்ளம் - கணக்கற்ற பிறவிகளினின்றும் விடுதலையை அளிக்கும் என்ற பரம உண்மையை இத் தொடர்தெள்ளிதின். விளக்கக் காணலாம். இராமனோடு சென்ற வானரசேனை எழுபது வெள்ளம் என இராமாயணம் கூறுகிறது. எண்ணில (INFINITE)தொகையைக் காட்டும் வெள்ளம் என்பது.

பாடல் தோறும் திருமால் மருகனாக முருகன் காட்டப்பட்டாலும், இப்பாடலிலே. சிவன்மைந்தன் எனவும், நாராயணது மைந்தனான பிரம்மதேவனை அடக்கிய கோவே எனவும் முருகன் போற்றப்படுகிறான். சிவனின் பெருமை கண்ணப்பனோடு சேர்த்தும், நாராயணன் மேன்மை மாவலியை அடக்கிய வாமனாவதாரம் கொண்டும் காட்டப்படுகிறது. ஆழ்வார்கள் திருமால் பெருமையை மாவலியிடம் கேட்டாற் றெரியும் எனக் கவி செய்துள்ளனர். இம்மட்டன்றி வள்ளிச் சந்மார்க்கமான காதல் நிலையும், வள்ளிமலைக்கும் திருத்தணிகைக்கும் வெகுதூரம் இல்லை என முருகன் வள்ளியோடு கதைக்கும் காட்சியும் பாடலின் இன்னொரு ஆத்ம நெறிக்கு முருகனடியார்களை நெறிப்படுத்தும் பாங்கும் உயிரோட்டமிகு படைப்பாகும். இதிலே வரும் கடின பதங்களின் பொருள் மட்டும் பாடலை விளங்க, புரிய, வழி காட்டும்.

வதன சரோருகம் முகம் ஆகிய தாமரைபோன்றது, நயனம் - கண், சீலீமுகம் - அம்பு. எம்மூர் - திருத்தணிகை, காதம் - பத்தும், பத்தும், அரை யொன்று ஐந்து (இருபத்தைந்து காத தூரம்) வள்ளிமலையில் இருந்து தணிகையும் வள்ளிமலையும் ஒன்று (ஒன்றுக்கு ஒன்று சமீபம்) வயலும் ஒரே இடை இரு ஊருக்கும் இடையில் ஒரு பார்தான் உளது கா- சோலை. வில்வம் அற்று ஒழிந்து உன்வல்லமை தொலைந்து அழிந்து மால் - இச்சை, மயக்கம், இதலிய - இனிப்புள்ளவை, காணிய - காண்பாய், வேடுவன் - கண்ணப்பன் லீலாசலம் - (சலம் லீலை) பொய்யான விளையாட்டு, தூயவன் சுத்தமூர்த்தியாம் சிவன் மைந்த - குமாரனே இளையவ - இளமைக்கோலமுடைய குமரனே, கதை - கௌமோதகி எனும் கதாயுதம், கனசாபம் - பெருமை பொருந்தியவில் - (சார்ங்கம்) சாரங்கம். திகிரி - சக்கரம். வளை - சங்கு (பரஞ்ச கன்யம்). வாள் - நாந்தகம் என்னும் வாள், சைவசித்த - கையிற் தாங்கிய, நந்தகோபன் - (கண்ணனது தந்தை) கோகுல அரசன் தேவி - ஆசோதை மகிழ்ந்து வாழ கயிறோடு, உலூகம் - (உரலோடு) கயிற்றினாற் கட்டிய உரல், கபாலம் - தலை விதரணம் மாவலி - கொடையிற் சிறந்த மாபலிச் சக்கரவர்த்தி திருமால்சேய் - பிரமன் வெள்ளிநகரில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் முருகப் பிரான் மீதெழுந்த பாடலே இத்திருப்புகழ்.

இவ்வபூர்வமான பாடல் போல இன்னோர் பாடல் சடாட்சர மகிமை பற்றி அமைந்துளது.

வசனமிக வேற்றி மறவாதே
மனது துய ராற்றி லுழலாதே
இசைபயில் டாக்ஷ ரமதாலே
இகபரசௌபாக்ய மருள்வாயே
பசுபதிசி வாக்ய முணர்வோனே
பழநிமலை வீற்ற ருளும்வேலா
அசுரர் கிளை வாட்டி மிகவாழ
அமரர் சிறை மீட்ட பெருமாளே

திருப்புகழ் 191

வசனமிகவேற்றல் - உருவேறச் செபித்தல், பசுதி வாக்கியம் - வேதசிவா கமங்கள் ஷடாக்ஷரம் - ஆறெழுத்து மந்த்ரம, சரவணபவ முருகநாமங்கள் பற்றி அருணகிரியார் அந்தாதி அலங்காரம், அநுபூதி திருப்புகழிற் சிலாகித்துப் பாடியுள்ளார். எனினும் திருமுருகாற்றுப்படையின் ஈற்றில் வரும் மலைகிழவோனே என உச்சரிப்பின் ஜென்ம ஜென்மாந்தரங்களெல்லாம் இல்லாதொழியும் என்பதை மிக்க இறுக்கமாகத் தெளிவுறக் காட்டியுள்ளமை இப்பாடலின் விழுமியம் எனலாம். இவ்வணம் அருணகிரியின் வாக்கும் வளமும், கருணையும் கருத்தும் அருணையில் முருகன் நாவிற் தீட்டிய வேலால் வந்த விளைவாகும். நாமும் நாம ஜெபத்தையும், பாடல்களையும் பாடிப்பாடி திருவேற்றுவோமாக திருவெய்துவோமாக

ஆதாரம் :- முருகவேள் பன்னிருதிருமுறைத் தொகுதி

*ஒரு பந்தியில் பலர் உட்காரும் போது முன்னதாகச் சாப்பிடக் கூடாது. சாப்பிடலாம் என்று பெரியவர்கள் கூறிய பின்னே அல்லது அவர்கள் சாப்பிட ஆரம்பித்த பின்பே சாப்பிட வேண்டும் பெரியவர்கள் எதிரில் கால் மீது கால் போட்டுக் கொண்டோ தொடையை ஆட்டிக் கொண்டோ தாளம் போட்டுக் கொண்டோ சாப்பிடக் கூடாது.*

தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது. 7.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் சிந்தனையில்

# நான் விரும்பும் பெரியார்

வீரத்துறவி

காலங்கள் தோறும் உலகில் மகான்கள் பலர் தோன்றுகின்றார்கள். உலகினை நல்வழிப்படுத்து கிறார்கள். வளம் மிகுந்த வையகத்தை உருவாக்கத் தமது வாழ்வை அர்ப்பணிக்கின்றார்கள். செயற்கரிய செயல்கள் செய்து மக்களின் சிந்தைகளில் எல்லாம் நிறைந்து இருக்கின்றார்கள். இம்மேன்மைமிகு மகான்களின் வரிசையில் மலர்ந்த முகமும் ஞான ஒளிவீசும் கண்களும், ஏறுபோல் பீடுநடையுங் கொண்டவரும், தன்னம்பிக்கையின் சிகரம் எனப் பலராலும் போற்றபடுகின்றவரும் ஆகிய சுவாமி விவேகானந்தரே என் மனங்கவர்ந்த பெரியார் ஆவார்.

இவர் 1863 ஆம் ஆண்டு தை மாதம் பன்னிரண்டாம் திகதி மண்ணுலகின் தவப்பயனாகக் கல்கத்தாவில் உதித்தார். இவரது பெற்றோர் விசுவாநதத்தர் புவனேஸ்வரி அம்மையார் ஆவர். நரேந்திரன் என்பது இவரது இளமைப் பெயராகும். நரேந்திரனின் தந்தையார் நிகரில்லா வள்ளலாக விளங்கினார். வரையறையற்று அனைவருக்கும் வாரி வழங்கினார். இதனால் அவரது குடும்பம் வறுமைக் கோட்டைத் தொட நேர்ந்தது. எனினும், வறுமையிலும் செம்மையாக நரேந்திரன் வளர்ந்தான்.

சிறு பருவத்திலேயே நரேந்திரன் நிறைந்த ஆளுமைப் பண்புகளை உடையவனாக இருந்தான். சிறுவர்களின் கூட்டத் தலைவராக விளங்கினான். இள வயதிலேயே அறிவின் தெளிவும் அபார ஆற்றலும் இவரது உடைமையாக விளங்கியது. அஞ்சா நெஞ்சங் கொண்ட இவர் வாள், மல்யுத்தம் போன்ற பயிற்சிகளிற் சிறந்து விளங்கினார். உயிரினங்கள் மீது இதய பூர்வமான அன்பு கொண்டவர். இவர் சிறு வயதிலேயே மனதை ஒருமுகப்படுத்தும் தியானம் இவருக்கு இலகுவான கலையாக இருந்தது. இத் தகைமைகளே பிற்காலத்தில் மனித குலத்திற்கும் சமயத்திற்கும் அளப்பரும் சேவைகளின் மூலமாக அமைந்தன.

இளம் வயதில் இராமகிருஷ்ண பரமஹம் சருடனான இவரது சந்திப்பு ஆன்மீக வரலாற்றின் முக்கிய நிகழ்வாகும். இராமகிருஷ்ணரைக் குருவாகக் கொண்டதனால் இவரது ஆன்மீக ஒளியும் சுடர் விட்டுப் பிரகாசிக்க ஆரம்பித்தது. நீர்க் குமிழியின் நிலையற்ற வாழ்வில் நிலையான சக்தியிடம் தம்மை அர்ப்பணித்தார். இவரின் குருவானவர் சிவபத மெய்தினார். பின்னர் சிஷ்யர் கூட்டத்தை வழிப்படுத்தும் தலைவராக விளங்கினார்.

இவர் நாவன்மையில் ஈடு இணை அற்று விளங்கினார். எமது மதத்தின் புகழ் நலிந்த காலத்தில் இவர் நிகழ்த்திய சொற்பொழிவுகளால் எமது சமயம் மறுமலர்ச்சி பெற்றது. வேதாந்தம் போதிக்கும் நல் ஆசானாக இவர் உலகமெங்கும் உரைகள் பல நிகழ்த்தினார் 1893 ஆம் ஆண்டு சர்வ மத மகாசபையில் இவர் ஆற்றிய உரை இவரை உலகப் புகழ் பெற்ற மகானாக மாற்றியது. பெருந் தொகையான மத போதகர்களும் மக்களும் நிறைந்த அரங்கிலே சுவாமி விவேகானந்தர் "அமெரிக்க நாட்டுச் சகோதர! சகோதரிகளே!" என்று விளித்துச் சொற்பொழிவை ஆரம்பித்தார். இவ் வார்த்தையில் இன, மத, நிறவேறுபாடுகள் அழிந்து போயின.

வேற்றுமை காட்டாத எமது மதத்தின் சீரிய பண்பு உன்னதமாக உணர்த்தப்பட்டது. இந்தியத் தாயின் தவப் புதல்வனால் எமது மதப் புகழ் விரியத் தொடங்கியது. ஆன்மீக ஒளி அகில மெங்கும் பரவும் படி பல நல் நூல்களைச் செய்தார். "ஞானதீபம்" "கீதை சொல்லும்பாதை" என்பன சிறந்த சான்றுகள் ஆகும். "தீமைகளுக்கு எதிராகப் போர்புரியுங்கள்" எனச் சமுதாயத்திற்கு அறைகூவல் விடுத்தார். "முயற்சி செய்: வெற்றி உனதே" என இளஞ் சமுதாயத்தை உற்சாகப்படுத்தினார். இவரது சொற்களால் இளைய சமூகம் நிமிர்ந்து கொண்டது. ஆன்மீகப் பேரொளி பேரழகுடன் வீசத் தொடங்கியது. துறவு வாழ்வை விரும்பி ஏற்ற துறவியான சுவாமி விவேகானந்தர் உலகிற்கு ஒளிஏற்ற வந்த அன்பராக, அறிவுத் தீபமாக, ஞான வீரானக, இவ் உலகில் நாற்பது ஆண்டுகள் வாழ்ந்து 1903 ஆம் ஆண்டு யூலை மாதம் 4ம் திகதி இறைவன் அடி சேர்ந்தார். அவரது புகழோ தினமும் ஓங்கிக் கொண்டே இருக்கின்றது.

"மானிட அவதாரங்களில் சுடர் விளக்கு இது"

யோ. சங்கர்

**Anxiety of mind cannot be removed, except from those who are united to the feet of him who is without likeness. 7.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகா சிவராத்திரி

செல்வச் செருக்குக்கும் கல்விச் செருக்குக்கும் எட்டாதவர் பரம்பொருள் என்பதை விளக்குவது சிவராத்திரி பற்றிய கதை. இலக்குமி நாயகனாகிய திருமாலும், சரஸ்வதி நாயகனாகிய பிரம்மாவும் இறைவனது அடிமுடி தேடிய கதையே சிவராத்திரி ஆகும்.

முன்னொரு பொழுது பிரம்மா உலகங்களையும், அங்கே இயங்கும் உயிர்களின் அழகிய உடல்களையும், அவை நுகரும் போகப் பொருள்களையும் பார்த்தார். "இவற்றை எல்லாம் நானன்றோ படைத்தேன் என்னில் மேலான வேறொரு கடவுள் இல்லை. நானே பரம்பொருள்" என்று செருக்குற்றார். இவ்வாறு செருக்கடைந்த பிரம்மா திருமாலிடஞ் சென்றார். அவர் பாற்கடலிற் பள்ளி கொண்ட வண்ணம் இருந்தார். பிரம்மா அது கண்டு "என் வரவையும் மதியாது நித்திரை செய்கின்றாயே எழுந்திரு" என்று சொல்லி அவருடைய மார்பிலே குத்தினார். திருமால் எழுந்தார் "நீ யார்? சொல்?" என்று பிரம்மா அதட்டினார். "மைந்தனே என்னைத் தெரியாதா? நான் தான் உனது தந்தை" என்றார் திருமால்.

பிரம்மாவுக்கு இதைக் கேட்டதும் சிரிப்பு உண்டாயிற்று. உனக்கு இன்னும் நித்திரை முறியவில்லைப் போலிருக்கிறது. வீணாகப் பிதற்றாதே நீ எனக்குத் தந்தை என்ற செருக்கை விட்டு விடு நீ பத்துப் பிறப்புகள் எடுத்தாயே! உன்னுடைய அந்தப் பத்து உடல்களையும் படைத்ததனால் என் கைகளுங்கன்றி விட்டன. இதோ பார் என்றார் பிரம்மா.

திருமாலுக்குக் கோபம் வந்தது, "பரமசிவம் கிள்ளிய உன் தலையை நீ இன்னும் படைத்துக் கொண்டாயில்லை. அப்படிப்பட்ட நீயா என் பிறவிகளைப் படைத்தாய்? உன் பேச்சு வேடிக்கையாக இருக்கிறது. நானின்றி உலகில் எந்தப் பொருளும் உண்டாகாது. நாராயணனும் நான், மறையும் நான், மறைப்பொருளும் நான், அந்தப் பரமசிவனும் நான், யாவும் நான்" எனத் திருமால் பலவற்றைச் சொன்னார். வாக்குவாதம் முற்றிக் கை கலப்பு ஏற்பட்டது. போர் சற்றுந் தளராது நடந்து கொண்டிருந்தது. அப்பொழுது அவர்களுடைய செருக்கை அடக்கி அவர்கள் செம்மனத்தராகச் சிவபெருமான் திருவுளங்கெணடார். இவருக்கும் இடையே ஒரு பெரிய சோதிப் பிழம்பாகத் தோன்றினார். . திருமாலும் பிரம்மாவும் பயந்து நின்றனர். அப்பொழுது "உங்கள் வலிமையை காட்ட இச்சோதி மலையின் அடியையும் முடியையுங் காணுங்கள்" என்றொரு அசரீரி கேட்டது.

திருமால் பெரியதொரு பன்றி வடிவங் கொண்டு அடியைத் தேடிக் கீழே அகழ்ந்து சென்றார். பிரம்மா அன்னப் பறவை வடிவங் கொண்டு முடியைத் தேடி மேலே பறந்து போனார். இருவரும் தேடிக் கண்டு பிடிக்க முடியாதவராய் அகந்தை அழிந்தனர். அரனடி பணிந்தனர். சோதிப்பிழம்பாக ஒடுங்கி இலிங்கோற்பவராகக் காட்சி கொடுத்த காலமே மகாசிவராத்திரி ஆகும்.

மகா சிவராத்திரி மாசி மாதத்திலே தேய்பிறைப் பதினான்காம் நாளிலே (கிருஷ்ண பட்சத்துச் சதுர்த்தசியிலே) வரும் விரதமாகும். நாள் முழுவதும் உணவை விடுத்து இரவு முழுவதும் கண்விழித்து முழு நேரத்தையும் சிவ சிந்தனையிலும், சிவனடியார் கூட்டத்திலும், சிவ கதை கேட்பதிலுங் கழிப்பது புண்ணியம் தரும். நள்ளிரவுக் காலமே இலிங் கோற்பவ காலமாகும். இக்காலத்தில் சிவதரிசனம் செய்வது மிகவும் விசேடமாகும். எமது மிக முக்கிய விரதமாக இது விளங்குகின்றது.

எமது நாட்டில் பாடல் பெற்ற தலங்களில் ஒன்றாகிய திருக்கேதீச்சரத்தில் சிவராத்திரி மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. அடியார்கள் பாலாவியில் நீராடி ஈர உடையுடன் வெள்ளிக் குடங்களில் நீர் கொணர்ந்து புராதன மகாலிங்கத்தைத் திருமுழுகாட்டுவர்.

ப. வத்சலா
தரம் 10
கொட்டாஞ்சேனை மெதடிஸ்த தமிழ் வித்தியாலயம்

அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீந்த லரிது. 8.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசி மகம்

– மாதினி

"குறிகளும் அடையாளமும் கோயிலும் நெறிகளும் அவர் நின்றதோர் நேர்மையும்"

என்கிறார் திருநாவுக்கரசர். இதில் இருந்து எமக்கு ஒரு உண்மை புலனாகின்றது. அதாவது நமது சமயச் சடங்குகளும் கோயில் விழாக்களும் ஒவ்வொரு சமய உண்மையை நுட்பமாக உணர்த்துவதற்கே அமைக்கப் பெற்றனவாகும்.

மாசி மாத மக நட்சத்திரத்தில் வரும் பௌர்ணமி நாளில் கடலாடுதல் மிகச் சிறப்பான பயனை உடையதாக முன்னோர்கள் கருதினர்.

மகம் என்னும் நட்சத்திரக் கூட்டம் வெட்டரிவாள் போலவும் அவற்றின் இடைப்பட்ட முழுநிலா கடல் போலவும் தோன்றும் இயல் புடைமையே இதற்குக் காரணம் போலும்.

கடலாடு விழா ஒரு பெரும் கடவுட்டிரு விழாவாகப் பண்டு தொட்டுக் கொண்டாடப் பெற்று வருகின்றது. பிறவிக் கடலில் வீழ்ந்து துன்பக் கடலில் அமிழ்ந்து வருந்தும் உலக மக்களை இறைவன் அவற்றினின்று எடுத்து அருட் கடலில் இன்ப வெள்ளத்தில் அமிழ்த்தித் திளைக்கச் செய்யும் திருவருட் குறிப்பையே கடலாடு விழா என்னும் சிறப்பு நிகழ்ச்சி உணர்த்துகின்றது எனலாம்.

இறைவனைக் கடல் என்றும் தீர்த்தன் என்றும் ஒரு வகையில் உருவகம் செய்து கடலாடுதல் நமது தீவினை கழிதற்குக் காரணமாதல் என்று உணரலாம்.

பத்திக் கடலுட் பதித்த பரஞ்சோதி தித்திக்கு மாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ என்னும் மணிவாசகம் இறைவன் எங்களைப் பிறவிக் கடலினின்று எடுத்தும் பக்திக் கடலிலும், அருட் கடலிலும், இன்பக் கடலிலும் ஆட்டியும் நலம்பல புரிகின்றான் என்பதை வலியுறுத்துகின்றது. இவ்வுண்மையை விளக்கவே கடலாடு விழா என்னாமல் கடலாட்டு விழா எனத் திருஞானசம்பந்த சுவாமிகள் பாடியருளினார்.

மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்
கடலாட்டுக் கண்டான் கபாலீச்சரம் அமர்ந்தாள்
அடல் ஆனேறு ஊரும் அடிகள் அடிபரவி
நடமாடல் காணாதே போதியோ பூம்பாவாய்

இத்தகைய பெருஞ்சிறப்பும், பழமையும், பயனும் மிக்க மாசிக் கடலாட்டு விழாவிற் பக்தி சிரத்தையோடு தீர்த்தம் ஆடித் தீவினை அகற்றிச் சித்தம் தெளிந்து சிந்தை களிகூர்ந்து நலம் பலவும் பெற்றுய்வோமாக.

மாசி மகத்திற்கு மற்றுமோர் மகிமை உண்டு. பராசக்தி ஒரு தாமரை மலரின் வலம்புரிச் சங்கு வடிவுடன் யமுனா நதியில் இருந்தார். தக்சன் வேதவல்லியுடன் யமுனையில் வந்து நீராடினான். அங்கிருந்த வலம்புரியைக் கண்டு வியந்து எடுத்தான் உடனே அது ஒரு பெண் உருவாயிற்று. சிவனார் தந்த வரத்தின்படி பராசக்தியே பாவையாக வந்தாள் எனவுணர்ந்தான். வேதவல்லியிடம் தந்தான். அவள் தன் மாளிகைக்குக் கொண்டு போய்த் தாலாட்டித் தாட்சாயணி என்று பெயர் சூட்டி அம்பிகையை இனிது வளர்ந்தான்.

சிவபெருமான் தக்சனுக்குத் தந்தவரத்தை நிறைவேற்ற பராசக்தி வலம்புரிச் சங்கு வடிவுடன் தாமரை மலரில் இருந்து பெண்ணுருப் பெற்று தாட்சாயணி எனும் நாமம் பெற்றது மாசி மகமாகிய மகத்தான நாளிலாகும்.

முன்னொருகால் வலிமை படைத்த அரசனொருவன் இருந்தான். அவன் பலரையும் வருத்தினான். அவனை வெல்லுவதற்கான வழிகளை அறியப்படுத்தி அவனைக் கொல்லும்படி வருணனுக்குத் தெரியப்படுத்த வருணன் குரு சென்றார். இருள் வேளையில் வருணனிடம்

குரு, முனிவர், ஆச்சாரியர்கள், குல புரோகிதன், குடும்ப ஜோதிடன், குடும்ப வைத்யன், மகான்களின் சரித்திரம், கெட்டஸ்திரியின் நடத்தை ஆகியவைகளைப் பற்றிய வீண் ஆராய்ச்சியில் ஈடுபடவோ, இவர்களுக்கு குற்றம் கற்பிக்கவோ இவர்களிடம் உள்ள அற்ப தவறுகளை பகிரங்கப்படுத்தி விமர்சனம் செய்யவோ கூடாது. இவர்கள் செய்வது தவறாக தென்பட்டாலும் அதற்கு களங்கம் கற்பிக்காமல் மௌனமாக இருப்பதே நல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றதனால் குருவைப் பகைவன் என்று எண்ணி வருணன் அவரைக் கொன்றான். வருணனைக் கொலைப்பழி சூழ்ந்தது. அவனது கைகளையும் கால்களையும் பிணைத்து சமுத்திரத்தில் விட்டது. அப்பாவத்தால் வருணன் பலகாலம் சமுத்திரத்தில் அமிழ்ந்தி வருந்தினான்.

வருணனின் பாவத்தை நீக்கி அவனுக்கு விமோசனமளிக்குமாறு தேவர்கள் சிவபெருமானிடம் இரந்து கேட்டனர். இறைவனும் தேவர்களது வேண்டுதலை நிறைவேற்றத் திருவுளங் கொண்டார். மாசி மாதம் மக நட்ததிரம் பொருந்திய தினத்தில் இறைவன் சமுத்திரத்திற்கு எழுந்தருளினார். சமுத்திரத்தில் அமிழ்ந்தி வருந்தும் வருணனின் பாவச் சுமையை நீக்கினார். துன்பத்திலிருந்து விடுதலை பெற்ற வருணன் இறைவனைத் துதித்தான். "சுவாமி எனக்குப் பாவ விமோசனம் அளித்த புண்ணிய தினமாகிய மாசி மக தினத்திலே சமுத்திரத்தில் நீராடுபவர்களின் பாவங்களை நீக்கியருளும் என வேண்டி நின்றான். இறைவனும் வருணன் கேட்ட வரத்தைக் கொடுத்தருளினார்.

மாசி மகத்துச் சமுத்திர தீர்த்தம் விசேடமானதாகும். பல தலங்களில் மாசி மகத் திருமஞ்சனம் நிகழ்வதைக் காண்கின்றோம்.

முருகப் பெருமான் சிவபெருமானுக்குப் பிரணவப் பொருளை உபதேசம் செய்ததும் மாசி மகம் என்னும் புண்ணிய தினத்திலே ஆகும்.

இவ்வாறான பல பெருமைகளைக் கொண்டதும் நினைக்க இனிமையும் போற்ற இன்பமும் விளைவிக்கும் பெருமை வாய்ந்து மாசி மகம்.

மாசில் மாதவர் மனத்திற்கினிமையே
பேசில் இன்பம் விளைக்கும் பெருமையே
வாசியாம் பரிஏறும் வலவனே
மாசி மாதம் வருக வருகவே.

# நினைவிற் கொள்வதற்கு

| | | | | |
|---|---|---|---|---|
| மாசி | 01 | 13.02.2000 | ஞாயிறு | மாதப்பிறப்பு விஷ்ணுபதி புண்ணியகாலம், பகல் 12.40 வரை, கார்த்திகை விரதம் |
| | 04 | 16.02.2000 | புதன் | பீம ஏதாதசி விரதம் |
| | 05 | 17.02.2000 | வியாழன் | பிரதோஷ விரதம் |
| | 06 | 18.02.2000 | வெள்ளி | நடேசரபிஷேகம் |
| | 07 | 19.02.2000 | சனி | மாசிமகம், பூரணை விரதம் |
| | 09 | 20.02.2000 | திங்கள் | திருவள்ளுவர் குருபூசை |
| | 10 | 22.02.2000 | செவ்வாய் | எறிபத்தர் குருபூசை |
| | 11 | 23.02.2000 | புதன் | சங்கடஹரசதுர்த்தி விரதம் |
| | 17 | 29.02.2000 | செவ்வாய் | காரியார் குருபூசை |
| | 20 | 03.03.2000 | வெள்ளி | பிரதோஷ விரதம் |
| | 21 | 04.03.2000 | சனி | மகா சிவராத்திரி விரதம் |
| | 22 | 05.03.2000 | ஞாயிறு | அமாவாசை விரதம் |
| | 26 | 09.03.2000 | வியாழன் | சதுர்த்தி விரதம் |
| | 28 | 11.03.2000 | சனி | ஷஷ்டி விரதம், கார்த்திகை விரதம் |

கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
தாளை வணங்காத் தலை. 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ வினா விடை

## வேதாகமவியல்

- ஆறுமுகநாவலர்

1. சிவபெருமான் ஆன்மாக்கள் பொருட்டு அருளிச் செய்த முதனூல்கள் எவை?
வேதம், சிவாகமம் என்னும் இரண்டுமாம். வேதத்தின் பெயர் சுருதி, நிகமம். ஆகமத்தின் பெயர் தந்திரம், மந்திரம், சித்தாந்தம்.

2. வேதம் எத்தனை?
இருக்கு, யசுர், சாமம், அதர்வம் என நான்காம்.

3. சிவாகமம் எத்தனை?
காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூக்குமம், சகச்சிரம், அஞ்சுமான், சுப்பிரபேதம், விசயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், ஆக்கினேயம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகவிம்பம், புரோற்கீதம், லளிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேசுரம், கிரணம், வாதுளம் என இருபத்தெட்டாம்.

4. வேதம் நான்கும் எங்கே தோன்றின?
சதாசிவமூர்த்தியுடைய தற்புருட முகத்தினின்றும் இருக்குவேதமும், அகோர முகத்தினின்றும் யசுர் வேதமும், வாமதேவ முகத்தினின்றுஞ் சாமவேதமும், சத்தியோசாத முகத்தின்றும் அதர்வவேதமுந் தோன்றின.

5. சிவாகமமிருபத்தெட்டும் எங்கே தோன்றின?
சதாசிவமூர்த்தியுடைய உச்சிமுகமாகிய ஈசானத்தினின்றுந் தோன்றின.

6. வேதம் நான்கும் எத்தனை சாகையுடையன?
இருக்கு வேதம் இருபத்தொரு சாகையும், யசுர்வேதம் நூறு சாகையும், சாமவேதம் ஆயிரஞ் சாகையும், அதர்வவேதம் ஒன்பது சாகையும் உடையன.

7. வேதம் நான்கும் தனித்தனி எத்தனை காண்டமுடையன?
பிரமகாண்டமும், பிரமகாண்டத்துக்கு நிமித்தமாகிய கருமகாண்டமும் என இரண்டு காண்ட முடையன. பிரமகாண்டத்தின் பெயர் பிரபல சுருதி, வேதாந்தம், வேதசிரசு, உபநிடதம், கருமகாண்டத்தின் பெயர் அற்பசுருதி.

8. வேதத்துக்கு அங்கமாகிய நூல்கள் எவை?
சிக்ஷை, கற்பம், வியாகரணம், நிருத்தம், சந்தோவிசிதி, சோதிடம் என்னும் ஆறுமாம்.

9. சிக்ஷையாவது யாது?
வேதங்களை உதாத்தம் அநுதாத்தம் முதலிய சுர வேறு பாட்டினால் உச்சரிக்கும் முறைமையை அறிவிப்பது.

10. கற்பமாது யாது?
வேதங்களில் விதிக்கப்பட்ட கருமங்களை அநுட்டிக்கும் முறைமையை அறிவிப்பது.

11. வியாகரணமாவது யாது?
வேதங்களில் எழுத்துச் சொற் பொருளிலக்கணங்களை அறிவிப்பது.

12. நிருத்தமாவது யாது?
வேதங்களின் சொற்களுடைய பொருளை அறிவிப்பது.

13. சந்தோவிசிதியாவது யாது?
வேதமந்திரங்களிற் காயத்திரி முதலிய சந்தங்களின் பெயரையும் அவ்வவைகளுக்கு எழுத்து இவ்வளவென்பதையும் அறிவிப்பது.

14. சோதிடமாவது யாது?
வேதத்தில் விதிக்கப்பட்ட கருமங்களைச் செய்தற்கு உரிய காலவிசேஷங்களை அறிவிப்பது.

15. வேதத்துக்கு உபாங்கமாகிய நூல்கள் எவை?
புராணம், நியாயம், மீமாஞ்சை, மிருதி என்னும் நான்குமாம்.

16. புராணமாவது யாது?
பரமசிவன் உலகத்தைப் படைத்தல் அழித்தல் முதலியவைகளைக் கூறும் வேதவாக்கியப் பொருள்களை வலியுறுத்தி விரித்து அறிவிப்பது. உலகத்தினது தோற்றமும், ஒடுக்கமும், பாரம்பரியங்களும், மனுவந்தரங்களும், பாரம்பரியக்

The head that worships not the feet of Him who is possessed of eight attributes, is profitless as a sense without the power of sensation. 9.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைகளுமாகிய இவ்வைந்தையுங் கூறுதலால், புராணம் பஞ்சலக்கணம் எனவும் பெயர் பெறும். இதிகாசமும் புராணத்துள் அடங்கும்.

**17. நியாயமாவது யாது?**

வேதப்பொருளை நிச்சயித்தற்கு அனுகூலமாகிய பிரமாணம் முதலியவைகளை அறிவிப்பது.

**18. மீமாஞ்சையாவது யாது?**

வேதப்பொருளினுடைய தாற்பரியத்தை அறிதற்கு அநுகூலமாகிய நியாயங்களை ஆராய்ச்சி செய்து அறிவிப்பது. அது பூருவமீமாஞ்சை, உத்தரமீமாஞ்சை என இரண்டு வகைப்படும். பூருவமீமாஞ்சையின் பெயர் கருமமீ மாஞ்சை, உத்திரமீமாஞ்சையின் பெயர் பிரமமீமாஞ்சை, வேதாந்த சூத்திரம்.

**19. மிருதியாவது யாது?**

அவ்வவ் வருணங்களுக்கும் ஆச்சிரமங்களுக்கும் உரிய தருமங்களை அறிவிப்பது.

**20. உபவேதங்கள் எவை?**

ஆயுர்வேதம், தனுர்வேதம், காந்தருவவேதம், அருத்தவேதம் என்னும் நான்குமாம்.

**21. ஆயுர்வேதமாவது யாது?**

எல்லாவற்றையும் அநுட்டித்தற்குச் சாதனமாகிய சரீரத்தை நோயின்றி நிலைபெறச் செய்தற்கு வேண்டப்படுபவைகளை அறிவிப்பது.

**22. தனுர்வேதமாவது யாது?**

பகைவர்களாலே நலியாது உலகத்தைக் காத்தற்கு வேண்டப்படும் படைக்கலப் பயிற்சியை அறிவிப்பது.

**23. காந்தருவ வேதமாவது யாது?**

கடவுளுக்கு மகிழ்ச்சியை விளைவிக்கும் இசை முதலியவைகளை அறிவிப்பது.

**24. அருத்த வேதமாவது யாது?**

இம்மைக்கும் மறுமைக்கும் ஏதுவாகிய பொருள்களைச் சம்பாதிக்கும் உபாயத்தை அறிவிப்பது.

**25. சிவாகமம் இருபத்தெட்டுந் தனித்தனி எத்தனை பாதங்களுடையன?**

ஞானபாதம், யோகபாதம், கிரியாபாதம், சரியாபாதம் என நான்கு பாதங்களுடையன.

**26. சிவாகமங்களுக்கு வழிநூல் எவை?**

நாரசிங்கம் முதல் விசிவான்மகம் ஈறாகிய உபாகமங்கள் இருநூற்றேழுமாம். நாரசிங்கத்துக்கு மிருகேந்திரம் என்றும் பெயர்.

**27. சிவாகமங்களுக்குச் சார்பு நூல் எவை?**

தத்துவப் பிரகாசிகை, தத்துவசங்கிரகம், தத்துவத்திரய நிர்ணம், போககாரிகை, மோக்ஷகாரிகை, நாதகாரிகை, பரமோக்ஷ நிராச கராரிகை, இரத்தினத்திரயம் என்னும் அட்டப்பிரகரணம் முதலியவைகளாம்.

**28. வேதத்தை ஓதுதற்கு அதிகாரிகள் யாவர்?**

உபநயனம் பெற்றவராகிய பிராமணர், க்ஷத்திரியர், வைசியர் என்னும் முதன் மூன்று வருணத்தார்.

**29. சூத்திரரும் நான்கு வருணத்துப் பெண்களும் எதற்கு அதிகாரிகள்?**

இதிகாச புராணம் முதலியவைகளை ஓதுதற்கும், வேதத்தின் பொருளைக் கேட்டற்கும் அதிகாரிகள்.

**30. சிவாகமத்தை ஓதுதற்கு அதிகாரிகள் யாவர்?**

சிவாகமத்திற் கிரியாகாண்டம் ஓதுதற்கு விசேஷதீக்ஷை பெற்ற நான்கு வருணத்தாரும், ஞானகாண்டம் ஓதுதற்கு நிருவாணதீக்ஷை பெற்ற நான்கு வருணத்தாரும் அதிகாரிகள்.

**31. பிராமணர் முதலிய முதன் மூன்று வருணத்தாருக்கும் எக்கிரியைகள் செய்யத் தக்கன?**

உபநயனம் மாத்திரம் பெற்றவருக்கு வைதிகக்கிரியைகள் மாத்திரஞ் செய்யத் தக்கன; உபநயனத்தோடு சிவதீக்ஷையும் பெற்றவருக்கு வைதிகக்கிரியைகளும் ஆகமக்கிரியைகளும் கலந்து செய்யத் தக்கன. ஆகமக்கிரியைகள் செய்யா தொழியின், அவர் பெற்ற சிவதீக்ஷையினால் ஒரு சிறிதும் பயனில்லை.

**32. சூத்திரர் முதலாயினருக்கு எக்கிரியைகள் செய்யத் தக்கன.**

சிவதீக்ஷை பெற்ற சூத்திரருக்கும் அநுலோமருக்கும் ஆகமக்கிரியைகள் செய்யத் தக்கன. சிவதீக்ஷை பெறாத சூத்திரர் முதலானவருக்குப் பிரணவமின்றி நமோந்தமாகிய தேவதோத்திரங்களைக் கொண்டு கிரியைகள் செய்யத் தக்கன.

**33. வேதத்தின் ஞானகாண்டப் பொருளைச் சிவாகமத்துக்கு மாறுபடாவண்ணம் உள்ளபடி அறிவிக்குந் தமிழ் வேதங்கள் எவை?**

தேவாரம், திருவாசகம் என்னும் இரண்டுமாம்.

பிறவிப் பெருங்கட லீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார். 10.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34. தேவாரம் அருளிச் செய்தவர் யாவர்?

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் என்னும் மூவர்.

35. திருவாசம் அருளிச் செய்தவர் யாவர்?

மாணிக்கவாசக சுவாமிகள்.

36. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் முதலிய இந்நால்வரும் எவ்வாறு பெயர் பெறுவர்?

சைவசமயகுரவர் எனப் பெயர் பெறுவர்.

37. சிவாகமத்தின் ஞானகாண்டப் பொருளைச் சுருக்கி இனிது விளக்குந் தமிழ்ச் சித்தாந்த சாத்திரங்கள் எவை?

திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞானபோதம், சிவஞானசித்தியார், இருபாவிருபது, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மைநெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் என்னும் பதினான்குமாம்.

38. திருவுந்தியார் அருளிச் செய்தவர் யாவர்?

உய்யவந்ததேவ நாயனார்.

39. திருக்களிற்றுப்படியார் அருளிச் செய்தவர் யாவர்?

திருக்கடவூர் உய்யவந்ததேவ நாயனார்; இவர் திருவுந்தியார் அருளிச் செய்த உய்யவந்ததேவ நாயனாருடைய சீடராகிய திருவியலூர் ஆளுடையதேவ நாயனாருடைய சீடர்.

40. சிவஞானபோதம் அருளிச் செய்தவர் யாவர்?

திருவெண்ணெய்நல்லூர் மெய்கண்டதேவர். இவருக்குச் சுவேதவனப்பெருமாள் என்பது பிள்ளைத் திருநாமம்.

41. சிவஞானசித்தியார், இருபாவிருபது என்னும் இரண்டும் அருளிச் செய்தவர் யாவர்?

சகலாகமபண்டிதர் என்னுங் காரணப்பெயர் பெற்ற திருத்துறையூர் அருணந்திசிவாசாரியார்; இவர் மெய்கண்டதேவருடைய சீடர் நாற்பத்தொன்பதின்மருள்ளே தலைவர்.

42. உண்மை விளக்கம் அருளிச் செய்தவர் யாவர்?

திருவதிகை மனவாசகங்கடந்தார்; இவர் மெய்கண்ட தேவருடைய சீடர்களுள் ஒருவர்.

44. எஞ்சி நின்ற சிவப்பிரசாகம் முதலிய எட்டும் அருளிச் செய்தவர் யாவர்?

கொற்றவன்குடி உமாபதிசிவாசாரியர்; இவர் தில்லைவாழந்தணர்களுள் ஒருவர், இவர் அருணந்திசிவாசாரியருடைய சீடராகிய திருப்பெண்ணாடக மறைஞானசம்பந்த சிவாசாரியருடைய சீடர்.

45. மெய்கண்டதேவர், அருணந்தி சிவாசாரியார், மறைஞானசம்பந்த சிவாசாரியார், உமாபதிசிவாசாரியர் என்னும் நால்வரும் எவ்வாறு பெயர் பெறுவர்?

திருக்கைலாச பரம்பரைச் சந்தான குரவர் எனப் பெயர் பெறுவர்.

46. மெய்கண்ட தேவருக்கு ஆசாரியர் யாவர்?

திருக்கைலாச மலையினின்றுந் தேவ விமானத்தின்மேற் கொண்டு எழுந்தருளி வந்த பரஞ்சோதி மகாமுனிவர்.

47. பரஞ்சோதி மகாமுனிவருக்கு ஆசாரியர் யாவர்?

சத்தியஞான தரிசனிகள்.

48. சத்தியஞான தரிசனிகளுக்கு ஆசாரியர் யாவர்?

சனற்குமார மகாமுனிவர்.

49. சனற்குமார மகாமுனிவருக்கு ஆசாரியர் யாவர்?

திருநந்திதேவர்.

50. திருநந்திதேவருக்கு ஆசாரியர் யாவர்?

ஸ்ரீ கண்டபரமசிவன்.

திருச்சிற்றம்பலம்

None can swim the great sea of births, but those who are united to the feet of God. 10.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LINGODBHAVAR

Lingodbhava "the linga - manifestation." is a familiar figure of Siva seen on the West wall of the central shrine of Siva temples built in Chola times. As his name implies, he is represented within a huge linga, the portion of the feet below the ankles being hidden in the linga. Brahma in the form of a swan is seen soaring up on the left side of Siva; While on the right side, Vishnu is delving below into the depths of the earth in the form of boar.

Also these Gods (i.e Brahma and Vishnu) in their true glory stand on either side of Siva with folded hands. The figure emanating from the middle of the linga has four hands like Chandrsekara and holds in back arms the axe and the antelope and in the front hands the abhaya and the varada postures.

In the illustration given the left hand is, however seen resting freely on the waist. In the Tanjore inscriptions Lingodbhava is mentioned by the name " Linga purana deva" i.e, the god of the Linga-purana which describes the greatness of the linga.

The story runs that a dispute arose between Brahma and Vishnu as to who is the greater of the two. Siva told them that whoever first saw the top or the bottom of his own fiery linga form and came back to report he would be considered the greater. Brahma soared on his swan to see the top of the Siva linga. While Vishnu as a boar dug down and down to see its bottom. Ages passed away and neither came to his goal.

At last Brahma saw one Ketagi flower coming down. It had fallen from Siva's head ages ago. Brahma suborned it to give false evidence and then came back and uttered a lie, saying that he had seen the top of the linga, citing the Ketaki flower as his witness. Siva knew the lie and cursed Brahma that he should thenceforward go without any worship in temples. Brahma had five heads at this time. Siva also Cut off the head which uttered the lie. The flower Ketaki too which abetted the crime, was excluded from the flowers dear to Siva. On an apology being offerd the latter was however accepted as a special case during the worship on the night of Sivaratry festival which falls on the fourteenth day of the dark half of Magha (January - February) in each year and is held sacred in honour of the linga mani - festation of Siva.



******

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SHAIVAISM

- S. Shivapadasundaram, B. A.

The next teaching of our philosophy is regarding the Ultimate cause of the inanimate Universe. There was a time when atoms were regarded as the ultimate cause of the physical Universe. But Siddhiar says that atoms cannot the ultimate cause, because they are themselves composed of other things. The Ultimate cause must be a non-composite thing, which our philosophy calls Maya.

The soul gains full knowledge by the gradual lifting of the a anavic veil. This it can do only by experience. When a soul finds itself in a situation which is altogether new, it is unable to adjust itself correctly and does wrong. It suffers in consequence and discovers some mistake in the adjustment. The next time it finds itself in a similar situation, it corrects the mistake and makes a better adjustment. But even this adjustment may not be quite correct and it suffers in consequence. It thus discovers some other mistake. This discovery of mistakes is a permanent addition to the knowledge of the soul. To put this in philosophic language, we perform acts which are called Karma, and experience the fruits of the Karma, which gives us additional knowledge. The attainment of such knowledge means slightly lifting of the a anavic veil. It must be remembered that only acts which have a moral bearing are called Karma in our philosophy. Acts like solving mathematical problems and spinning cotton thread are not Karma in the Philosophic sense and are referred to in this book as actions. Secondly, the knowledge obtained by experiencing the fruits of Karma is absolute knowledge unlike knowledge obtained through the intellect, such as scientific knowledge A man may be an ocean of scientific knowledge and yet be inferior in spiritual knowledge to an illiterate jungle - dweller.

Our experiences are the result of three factors. One of these is our past Karma called prarabdha. The second is that portion of the Karma of the present birth called drishta agamya, the third is our exertion or toil. The effects of these cannot cancel on another but may counter - act one another. For example, suppose, as the the result of prarabdha, my house is burning and as a result of a good drastic Karma, a large number of people may just then appear on the scene, say, from a wedding procession and put out the fire immediately. In this case the driest Karma, counteracts prarabdha. On the other hand if the house is reduced to ashes, I can rebuild it with the money that I earned by hard labour. In symbolic language, if our experience is denoted by y, our driest Agamya by x, our toil by z and prarabdha by c, we find that Y=x+z+c. This shows that the more drishta agamaya we perform, the more we labour hard, the more pleasant will be our experience in this world. Our philosophy thus gives a strong stimulus to hardwork, the more pleasant will be our experience in this world. Our philosophy thus gives a strong stimulus to hard work.

Whereas, pain is the consequence of wrong Karma, pleasure is the consequence of right Karma. This is the Law of Karma while pain gives right understanding; pleasure confirms it. These consequences of Karma do not all reach the soul immediately after it is performed. The law is administered by God, and the pain or pleasure corresponding to a Karma is given to the soul at a time when its experience will give it the maximum benefit. If it reaches the soul in

பிராமணர்களை பூஜிப்பவன், ஜோதிடரை பேணுபவன் தேசாபிமானம் உள்ளவன், கல்வி அறிவு உள்ளவன், நல்ல நடத்தை உள்ளவன். தைரியம் உள்ளவன், தர்மம் செய்பவன் ஆகியவர்கள் உள்ள இடத்தில் பொன் விளையும். (ஜனங்கள் கஷ்டப்பட மாட்டார்கள்)

******

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

the birth in which it is committed it is called dhrishtam, It in some subsequent birth it is called adhristham; and if partly in some other birth, it is called dhrishta-dhrish-tam. Everything that we get, whether wealth or poverty, loss or gain, health or disease, is the fruit either of our action or our Karma. We cannot get anything except as the fruit of some action or Karma. People pray to God for certain things. If they ever get them, it is according to the law of Karma or as a reward for labour but not in consequence of their prayer. No one gets anything from God for mere begging.

One of the greatest glories of Shaivaism is that it offers god - liness to each and every soul without exception. Godliness cannot be attained, in a single birth. We do not know the soul though we are ourselves souls; and we know next to nothing of God. Our spiritual knowledge is thus very poor. We also know that our spiritual progress in this birth is almost negligible. It thus follows that we must take several births before we can become godly.

To summarise Shaiva philosophy:- There is one God. There are many souls. Their ability to know is hindered by Anava. This hindrance is gradually removed by their performing of Karma and experiencing its fruits. The law of Karma is "Pain is the consequence of wrong doing, and pleasure is the consequence of right doing". Every soul without exception will ultimately attain divine bliss. This requires several births. The doctrine of rebirth is one of the characteristics of Shaiva philosophy. The invicveil varies in hardness from soul to soul, which explains, not only inequality in the present situations of souls, but also in the time taken by them to attain divinity. Millions of souls have already attained it and millions are left who will attain it in future.

The evolution of the soul takes place in the mere presence of God. This consists of five elements. One of these is the soul taking a body so that it may perform Karma and get rid of the anavic barrier. This element is called creation (படைத்தல்). The body that the soul takes is such as will be fit to experience that portion of its past Karma called prarabdha. The body will be maintained till the whole prarabdhda is exhausted. This element is called maintenance (காத்தல்). When prarabha is exhausted the body is destroyed. This is called dissolution (அழித்தல்). The weakening of the anavic grip that took place during that life is called suppression (மறைத்தல்). The granting of Divine bliss on the total removal of the Anavic barrier is called liberation (அருளல்). God's presence in virtue of which the soul undergoes evolution is called His Shakti. That which performs the first four acts is called the Adishakti (ஆதிசக்தி) or Tirodhana Shakti, and that which performs the fifth act called Arul Shakti. The two Shaktis are really one but are given different names during the performance of different acts. Anava, Maya and Karma are called Malams or Pasams.

Another glory of Shaivaism is that it is consonant with life. We are dependent on God and therefore feel bound to obey His laws. He loves us, and we love Him. adore Him and worship Him. But, there are several religions whose philosophy and life are poles asunder. There is a religion which say that every soul is created by God afresh and that every soul which commits sin is sent by God to eternal hell. There can be no human being who will not commit at least one sin in his life time. So every man is bound to feel that he will surely be sent to hell. Having been destined to go to hell, whether he commits a single sin or many sins. He prefers to commit a sin everytime it is found to be expedient. If the religion says that all those who believe in the founder of the religion will not go to hell, the believer would commit sins still more freely as he would never be sent to hell. Such a philosophy is not helpful to righteous life. Besides, he cannot be a good god who creates soul afresh and is pleased to doom most of them to eternal suffering in hell.

**(to be Continued in the next issue)**

எக்காளம், பேரிகை, சங்கு, இயந்திரம், வண்டி, உரல் உலக்கை, செக்கு, ஆலை, சண்டை இவைகளின் சப்தம் கேட்கும் போது சாப்பிட உட்காரலாகாது.

******

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ சமய அறிவுப் போட்டி

போட்டி இல. 5 முடிவுத் திகதி: 31. 03. 2000

1. மகா சிவராத்தியில் இறைவனைக் காணப் பிரம்மா, விஷ்ணு எடுத்த வடிவங்கள் யாவை?
2. பிரம்மாவுக்கு இறைவன் இட்ட சாபம் என்ன?
3. திருநாவுக்கரசு நாயநாரின் தமக்கையார் பெயர் யாது?
4. இலங்கையில் அறுபத்து மூன்று நாயன்மார்களுக்கும் எழுந்தருளி விக்கிரகம் அமைந்துள்ள ஆலயம் யாது?
5. “தாயினும் நல்ல தலைவர் என்றடியார்” எனும் தேவாரம் பாடப்பட்ட திருத்தலம் யாது?
6. மாணிக்கவாசகப் பெருமான் மன்னனுக்குக் குதிரைகள் கொண்டுவந்த தினம் யாது?
7. மாசி மாதத்தில் வரும் விசேட தினங்கள் யாவை?
8. திருக்குறளில் எத்தனை அதிகாரங்கள் உண்டு?
9. “பூசுவதும் வெண்ணீறு” எனும் திருச்சாழல் பதிகம் பாடப்பெற்ற திருத்தலம் யாது?
10. திருஞான சம்பந்த மூர்த்தி நாயானாரின் குருபூசைத் தினம் யாது?

## போட்டியிற் கலந்து கொள்வோர் கவனத்திற்கு:

1. எவரும் பங்கு கொள்ளலாம்.
2. சைவநீதி இதழில் வெளியாகியுள்ள கூப்பனுடன் விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும்.
3. ஒருவர் ஒரு விடைத்தாள் மட்டுமே அனுப்பலாம்.
4. நிறைவு செய்யப்பட்ட விடைத்தாள்கள், 2000.03.31 ஆந் திகதிக்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.

   விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி : **MR. K. SWAMINATHAN**
   227/19, Mahavidyalaya Mawatha,
   Colombo - 13.
5. வெற்றி பெறும் மூவர் பரிசில் பெறுவர்.
6. போட்டி அமைப்பாளர் குழு முடிபே இறுதியானது.

   முதற்பரிசு ரூபா 100
   இரண்டாம் பரிசு ரூபா 50
   மூன்றாம் பரிசு சைவநீதி ஒன்று

ஆசிரியர்

---

உ
சிவமயம்

**சைவநீதி**

சமய அறிவுப் போட்டி இல. 3

பெயர் : ..........................................................................................

முகவரி : ..........................................................................................

..........................................................................................

..........................................................................................

கையொப்பம்

✻✻✻✻✻✻

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போட்டி இல. 3 - விடைகள்

1. முதல் ஏழு திருமுறைகள் (தேவாரம்)
2. வேதசாரம், தமிழ் வேதம் என அழைக்கலாம்.
3. திருஞான சம்பந்தர், சுந்தரமூர்த்தி நாயனார்
4. மாணிக்கவாசக சுவாமிகள்
5. தேவார திருவாசகங்களைப் பண்ணோடு பாடக் கூடியவர்கள்.
6. வகுத்தவர் – நம்பியாண்டார் நம்பி, வகுப்பித்தவர் – இராஜ இராஜசோழன்
7. ஏழாம் திருமுறை
8. திருப்பைஞ்ஞீலி
9. 18ம் வயதில் முக்தியடைந்தார்
10. நமசிவாய

**போட்டி இலக்கம் 3ல் பரிசு பெற்றோர் விபரம்**
**அடுத்த இதழில்**

☛ பிரமாதி தை இதழ் முதற்பக்க இறுதிவரியை "நன்மை கடலிற் பெரிது" என மாற்றிக் கொள்க.

ஆ..ர்.

## சைவநீதி - சந்தா விபரம்

| தனிப்பிரதி | | | வருடச்சந்தா | | |
|---|---|---|---|---|---|
| இலங்கையில் | - | ரூபா 25.00 | இலங்கையில் | - | ரூபா 250.00 |
| இந்தியாவில் | - | ரூபா 25.00 (இந்திய ரூபா) | இந்தியாவில் | - | ரூபா 250.00 (இந்திய ரூபா) |

ஏனைய நாடுகளில் ஸ்ரேலிங் பவுண் 10 அல்லது US $ 15. சைவநீதியின் வளர்ச்சிக்கு உங்கள் ஒவ்வொருவரதும் பங்களிப்புப் பெரிதும் வேண்டப்படும்.

சந்தா அனுப்பப்பட வேண்டிய முகவரி:

**C. NAVANEETHAKUMAR,**
42, Janaki Lane,
Colombo - 04,
Sri Lanka.

******

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ வளர்ச்சி கருதிய செய்தி தரும் மாத இதழ்

**MONTHLY MAGAZINE OF**

**SAIVAISM FEBRUARY- MARCH - 2000**



**Regd. No. QD/22/ News 2000.** இவ்விதழ் சைவநீதி நிறுவனத்தினரால் **48B**, புளூமெண்டோல் வீதி, கொழும்பு 13 என்னும் முகவரியிலுள்ள [illegible] 2000. 02. 13 இல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org